விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 37 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை (27.11.2024)







## தாழமுக்கம் Fengal சூறாவளியானது

### தமிழகம் நோக்கி நகர்வு



# கரையோரங்களில் இன்றும் நாளையும் கடும் தாக்கம்





(சுப்ரமணியம் நிஷாந்தன்)

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் மட்டக்களப்பில் இருந்து 170 கிலோமீற்றர் தொலைவிலும், திருகோணமலையிலிருந்து 240 கிலோமீற்றர் தொலைவிலும் தென்கிழக்கே நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை இன்று புதன்கிழமை புயலாக மாறி, தமிழ் நாட்டின் வட கடலோர மாவட்டங்களை நோக்கி செல்லும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் இன்று உருவாகும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எதிர்பார்த்துள்ள புயலுக்கு ஃபெங்கல் (fengal) என பெயரிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்கு, கிழக்கு பருவ மழையுடன் காற்றழுத்த தாழ்வு நிலையும் உருவாகியுள்ளதால் வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்கள் அதிகமாக பாதிப்புக்கு (தொடர்ச்சி...)

02

## வடக்கு மாகாணத்தில் 49,000 பேர் பாதிப்பு




வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 15 ஆயிரத்து 427 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 577பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர்கள் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 40 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 436 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் பலர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் (தொடர்ச்சி...)

02

## 10 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்



10 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் உள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் இரண்டாம் கட்டத்தின் கீழ் மண்சரிவு அபாயம் உள்ள மாவட்டங்களாகும்.

அத்துடன் காலி, களுத்துறை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் 1ஆம் கட்டத்தின் கீழ் மண்சரிவு அபாயம் குறித்து அவதானமாக இருக்குமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

## க.பொ.த. உ/த பரீட்சை ஒத்திவைப்பு

### டிசம்பர் 21,22,23 - திகதிகளில் மீண்டும் நடத்துவதற்கு ஏற்பாடு

(எஸ்.டொரின்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் மூன்று நாட்களுக்கு நடத்துவதில்லை என பரீட்சை திணைக்களம் தீர்மானித்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். பரீட்சைகள் தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்,

நாட்டில் தற்போது நிலவும் அசாதாரண காலநிலை மேலும் தீவிரமடைந்து தென்மேல் வங்காள (தொடர்ச்சி...)

02



## அம்பாறை மாவட்டம்: வரலாறு காணாத வெள்ளம்: சுமார் 15,000 பேர் பாதிப்பு

( வி.சுகிர்தகுமார், ஏ.எல்.எம். முக்தார் )

அம்பாறை மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 4000 குடும்பங்களைச் சேர்ந்த 14,000 இற்கும் மேற்பட்ட மக்கள் தற்போதுவரை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் எனவும் கூறினார்.

இதேநேரம், பல்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தற்காலிக தங்குமிட முகாம்கள் (தொடர்ச்சி)

02



## பாதுகாப்பு கவுன்சிலில் ஆராய்ந்தே வடக்கில் காணிகள் விடுவிப்பு

### பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றால் ஆவணங்களை சமர்ப்பியுங்கள்



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

வடக்கில் உள்ள வீதிகளை தொடர்ந்து மூடி வைத்திருப்பதும், காணிகளை விடுவிக்காதிருப்பதும் அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. மக்களின் வாழ்க்கை மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இரண்டையும் ஆய்வு செய்து அவற்றை விடுவிப்பதையே அரசாங்கம் விரும்புகிறது என அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ (தொடாச்சி...)

02

## மலையகத்தில் பெரும் பாதிப்பு - நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் மக்கள் அவதி

(எஸ்.டொரின்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா, பதுளை உள்ளிட்ட மலையகத்தின் பல பகுதிகளில் வாழும் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வானிலை அவதானமையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக மலையகத்தை பொறுத்தவரையில் குடியிருப்புகளில் வெள்ள நீர் வடிந்துள்ளமையினாலும், பலத்த காற்று வீசு கின்றமையினாலும் (தொடர்ச்சி.)

02



## இந்தியப் பயணத்தின் பின்னர் சீனா செல்லும் ஜனாதிபதி



ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்கவை சீனாவுக்கு அதிகாரபூர்வ பயணம் மேற்கொள்ளுமாறு இலங்கைக்கான சீனதூதுவரால் உத்தியோகபூர்வ அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதம்மூன்றாம் வாரத்தில் ஜனாதிபதி இந்தியாவிற்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். (தொடர்ச்சி...)

02

## இலங்கையில் அதானி குழுமத்தின் முதலீடுகள் சாத்தியமா?

### தீவிர பரிசீலனையில் அரசாங்கம்

( பாலகணேஷ் டிலுக்ஷா)

பாரிய நிதி மோசடி குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்திய கோடீஸ்வரரான கௌதம் அதானியின் இலங்கை முதலீடு குறித்து தீவிரமாக ஆலோசித்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் (தொடர்ச்சி...)

02

### உயிரிழந்தோரை நினைவு கூர்வதை தடுக்க

## அரசாங்கத்துக்கு அனுமதி இல்லை

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர அரசாங்கம் எவ்வித தடைகளையும் ஏற்படுத்தாது என்பதுடன், தடைகளை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு அனுமதியும் இல்லை. ஆனால், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பையோ அல்லது அதன் உறுப்பினர்களையோ (தொடர்ச்சி...)

02

## கரையோரங்களில்...

உள்ளாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காற்றமுத்தத்தாழ்வுநிலை இன்றுபுதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் இலங்கையில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளதுடன், நாளைய தினம் அது இந்தியாவின் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஃபெங்கல் என பெயரிடப்பட்டுள்ள இந்த புயலை எதிர்கொள்ள தமிழக அரசாங்கத்தால் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தமிழக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் முதல் கிழக்கு மாகாணத்தில் இந்த காற்றமுத்த தாழ்வு நிலை பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. அம்பாறை மாவட்டத்தில் பல இடங்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. நேற்று அதிகாலை வரையான 24 மணித்தியாலத்தில் கிழக்கு மாகாணத்திலேயே அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. நேற்று அதிகாலை ஆறு மணிவரையான 24 மணித்தியாலத்தில் அம்பாறை மாவட்டத்தில் லஹுகல பிரதேசத்தில் 191 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதனால் கொழும்பு – அம்பாறை பிரதான வீதி நீரில் மூழ்கியது. சில பாடசாலைகளும் நீரில் மூழ்கின. மாவட்டத்தில் பல பகுதி கள் நீரில் மூழ்கியதுடன், பல வீடுகள் முற் றாக பாதிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாக முடங்கியுள்ளது. பாதிப்பிலிருந்து இவர்களை மீட்டெடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உணவுகளை விநியோகிக்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதிக மழை வீழ்ச்சி காரணமாக கிழக்கு மாகாணத்தில் உயர்தரப் பரீட்சைக்கு செயல்படாத முஸ்லிம் மற்றும் ஏனைய பாடசாலைகளை நேற்றும் இன்றும் மூடுவதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் விக்ரமரத்ன ஆலோசனை வழங்கியுள்ளார்.

மகாவலி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக மகாவலி ஆற்றின் சில தாழ்வான பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

திம்புலாகல, எச்சிலம்பட்டை, ஹிங்குராங்கொட, கந்தளாய், கிண்ணியா, கோறளைப்பற்று வடக்கு, லங்காபுர, மெதிரிகிரிய, மூதூர், சேருவில, தமன்கடுவ, தம்பலகாமம் மற்றும் வெலிகந்தவுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை வடக்கு மாகாணத்துக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கடும் மழை காரணமாக வடக்கு மாகாணத்தின் பல தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. பல வீடுகளும் நீரில் மூழ்கியுள்ளன. இன்றைய தினமும் வடக்கில் சீரற்ற காலநிலை நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கும் நிலை ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று,வடமத்திய மாகாணத்திலும் சீரற்ற காலநிலை பல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், இங்கு வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இங்கு சில வீடுகள் மீது மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன், விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மழை காரணமாக போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் மரக்கறிகளை கொண்டுசெல்வதில் பாரிய சிக்கல்கள் நேற்று ஏற்பட்டிருந்ததாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதனால், சந்தையில் மரக்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.ஊவா மாகாணத்திலும் சீரற்ற காலநிலையால் மக்கள் கடுமையாக பாதி க்கப்பட்டுள்ளனர். பதுளை ஓயாவின் நீர்மட்டம் உயர்ந்ததால் சூரதிஸ்ஸ கிராமம் நீரில் மூழ்கியது. அதேபோன்று பல பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள் ளன. பதுளை – கொழும்பு பிரதான வீதியின் ஹாலியெல பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதால் போக்குவரத்தும் கடுமையாக பதிக்கப்பட்டிருந்தது. மலையகத்துக்கான புகையிரதப் பாதையிலும் சில பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டதால் மலையகத்துக்கான புகையிரத சேவை நேற்று பாதிப்புக்கு உள்ளாகியிருந்தது.

அதிக பாதிப்புக்கு உள்ளாகும் மாகாணங்களின் சில பகுதிகளில் 200 மில்லி மீற்றர் மழை பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளதுடன், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் 100 மில்லி மீற்றர் வரை பதிவாகும் எனவும் கூறியுள்ளது. காற்றமுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து கிழக்கு கடற்கரைக்கு மிக அருகில் நகரக்கூடும் என்பதால் இன்றைய தினம் இலங்கையின் கிழக்கு, வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாண மக்களுக்கு அதிகமான பாதிப்பு ஏற்படும் என கருதப்படுவதால் மிகவும் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மிக பலத்த காற்று இன் றும் எதிர்பார்க்கலாம். அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

## மலையகத்தில்...

பொதுமக்கள்பெரும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

மேலும், நேற்று முன்தினம் (25)இரவு முதல் தொடர்ச்சியாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக தாழ்நிலைப் பிரதேசங்களில் அண்டி வாழும் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில், நுவரெலியா மாவட்டத்தில் 43 குடும்பங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், 134 நபர்கள் தங்களது வீடுகள் முற்றிலும் சேதமடைந்ததுடன், சிறு பாதிப்புகள் மூலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தை பொருத்தவரை 20 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 43 நபர்கள் வீடுகள் மற்றும் சிறு சேதங்கள் மூலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தை பொருத்தவரையில், கந்தபளை, ஹைபொரஸ்ட், ரேஸ்கோஷ் குடியிருப்பு , பம்பரகலை மற்றும் நானுஓயா பகுதிகளில் பெய்யும் கடும் மழை காரணமாக பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன.பண்டாரவளை பிரதேசத்தில் நேற்று(26) காலை 7 மணியளவில் கவிறொன்று இடிந்து விழுந்ததில் 61 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். மேலும், வயோதிபர் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

**48 மணித்தியாலத்துக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பு**

எதிர்வரும் 48 மணித்தியாலங்கள் வரையிலான காலப்பகுதிக்குள் வெள்ள நிலைமை ஒன்று ஏற்படும் நிலை காணப்படுவதாக நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நீர்பாசன பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் சில பிரதேசங்களில் நேற்று இரவு முதல் கிடைக்கப்பெற்று வரும் அதிக மழை வீழ்ச்சியின் காரணமாக ஹெட ஓயாப் பள்ளத்தாக்கின் லாஹூகல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உரித்தான ஹெட ஓயாவினைச் சுற்றியுள்ள தாழ் நிலப் பிரதேசங்களுக்கு தற்பொழுது முதல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மகாவலி கங்கையின் சில நீரேந்துப் பிரதேசங்களுக்கு நேற்று இரவு முதல் கிடைக்கப்பெற்று வரும் அதிக மழைவீழ்ச்சி காரணமாக திம்புலாகல, கச்சலம்பட்டை, ஹிங்குராங்கொட, கந்தளாய், கிண்ணியா, கோரளைப்பற்று வடக்கு, லங்காபுர, மெதிரிகிரிய, மூதூர், சேருவில, தமன்கடுவ, தம்பலகாமம் மற்றும் வெலிகந்த ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை கொண்ட தாழ்நில பிரதேசங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆதலால், மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களிடத் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், ஏற்படக்கூடிய வெள்ள நிலைமைகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் கோரிக்கை விடுத்துள்ளது. மேலும், இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அனர்த்த முகாமைத்துவப் பிரிவுகளிடம் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

## இந்திய...

என்றாலும், இந்த பயணத்தை மேற்கொள்ளும் திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

விரைவில் இதுதொடர்பிலான தகவல்களை அரசாங்கம் வெளியிடும் என்றும், இந்தப் பயணத்தை தொடர்ந்து ஜனாதிபதி சீனா செல்வார் என்றும் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் கூறியுள்ளார்.

## பாதுகாப்பு...

தெரிவித்தார். வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ளதால் குறித்த நிலைமைகளை அவதானித்தே காணிகளை விடுவித்தல் மற்றும் இராணுவ முகாம்களை அகற்றுவது குறித்து தீர்மானங்களை எடுக்கிறோம்.

அரசாங்கம் எடுக்கும் தீர்மானம் தொடர்பில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக எதிர்க்கட்சி எம்.பி எவரும் கூறினால் அவர்கள் எந்த காரணத்துக்காக பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது என எழுத்துமூலமான ஆவணத்தை சமர்ப்பிக்க முடியும். பாதுகாப்பு கவுன்சிலில் முன்வைக்கப்படும் புலனாய்வு தகவல் உட்பட பல்வேறு காரணிகளின் அடிப்படையில்தான் இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. யுத்தக்காலத்தில் மூடப்பட்ட வீதிகளையோ அல்லது கைப்பற்றப்பட்ட காணிகளையோ அவ்வாறே கொண்டுசெல்ல அரசாங்கம் விரும்பவில்லை என்றார்.

## இலங்கையில்...

அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று செவ்வாய்க்கிழமை அவர் இதனைக் கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் அதானியின் தற்போதைய திட்டங்களை அரசாங்கம் மீளாய்வு செய்து வருகிறது. அமைச்சரவைக் கூட்டத்தில் அதானியின் திட்டங்கள் தொடர்பில் எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் இது குறித்து ஆராய்ந்து வருகிறது.

மேலதிக மதிப்பீட்டிற்காக தொடர்புடைய அமைச்சகங்களிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன" என்றார்.

அதானி குழுமத்திற்குச் சொந்தமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமான அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்திற்கு பில்லியன் டொலர் மதிப்புள்ள ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இந்திய அரச அதிகாரிகளுக்கு 250 மில்லியன் டொலர்களுக்கு மேல் இலஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளதாக நியூயோர்க் சமஸ்டி நீதிமன்றத்தில் (குனநசயட ஊழரசவ) கடந்த புதன்கிழமை (20.11.2024) அமெரிக்கா வழக்கு தாக்கல் செய்தது. இந்த குற்றச்சாட்டை அதானி குழுமம் மறுத்த போதிலும் அந்த நிறுவனத்தின் பங்குகள் சரிவடைந்தது. அத்துடன் கென்யாவில் அதானி நிறுவனம் முன்னெடுக்க இருந்த விமான நிலைய விரிவாக்கம் மற்றும் மின்சார திட்டம் இரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் மேலும் பல நாடுகள் அதானியின் முதலீட்டு திட்டங்களை இரத்து செய்யகூடும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

அந்த வகையில் மன்னாரிலும், பூநகரியிலும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டமொன்றையும், மின் விநியோகக் கட்டமைப்பொன்றையும்

உருவாக்கும் பணியை இந்தியாவின் அதானி குழுமம் முன்னெடுத்து வருகின்றது.ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம்இந்தியாவின் அதானி குழுமத்துடனான காற்றாலை மின் உற்பத்தி ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யவுள்ளதாக முன்னதாகவே தெரிவித்தது.புதிய குற்றச்சாட்டுக்கள் அவற்றை மேலும் மெருகூட்டும் வகையில் அமைந்திருக்கிறது.

மன்னாரிலும், பூநகரியிலும் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டங்களுக்காக அதானி குழுமம் 442 மில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது. இந்த முதலீடானது இலங்கையில் அதானி குழுமத்தின் இரண்டு பெரிய திட்டங்களில் ஒன்றாகும்.

இதேவேளை, இலங்கையில் அதானி குழுமத்தின் ஆதரவுடன் செயல்படும் கொழும்பு, துறைமுக அபிவிருத்திக்கு 500 மில்லியன் டொலருக்கும் அதிகமான கடனுதவி வழங்க ஒப்புக்கொண்ட அமெரிக்க நிறுவனம்,குறித்த திட்டத்தில் உரிய கவனம் செலுத்தி வருவதாகக் கூறியுள்ளது.

## க.பொ.த

விரிகுடா பிரதேசத்தில் வலுவடைந்துள்ள தாழமுக்கமானது இன்று(27) சூறாவளியாக வளர்ச்சியடையலாம் என காலநிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

மேலும், சீரற்ற காலநிலை காரணமாக மாணவர்கள் பெரும் சிரமத்துக்கு முகம் கொடுத்துவருகின்றனர். இந்நிலையில், மாணவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை கருத்திற்கொண்டு பரீட்சைகளை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மாணவர்களின் நலன்கருதி இன்று(27) நாளை (28) மற்றும் நாளை மறுநாள் (29) ஆகிய மூன்று நாட்களும் எந்தவொரு தேர்வும் நடைபெறாது என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து 30ஆம் திகதி சனிக்கிழமை மீளவும் ஆரம்பிக்கப்படுவதுடன், அன்றைய தினத்திலிருந்து தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள பரீட்சை நேர அட்டவணைக்கு அமைய சாதாரணமாக பரீட்சை நடாத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

பரீட்சை நடாத்தப்படாதிருக்கும் 2024 நவம்பர் 27,28,29 ஆகிய தினங்களுக்குரிய பாடப் பரீட்சைகள் 2024 டிசம்பர் 21,22,23ஆகிய தினங்களில் நடாத்தப்படுவதுடன், அதற்குரிய திருத்தப்பட்ட நேர அட்டவணை உரிய காலத்தில் வெளியிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு சிறந்த முறையில் பரீட்சைகளை நடாத்துவதற்கு கல்வி அமைச்சு, பொலிஸார், இராணுவத்தினர் என பலரும் தங்களால் முடிந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது என்றார்.

## உயிரிழந்தோரை...

நினைவுகூர முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூர அரசாங்கம் அனுமதித்துள்ளதா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்டிருந்த வர்த்தமானியின் பிரகாரமே நாம் செயல்படுவோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெளிவாக கூறியுள்ளார். பயங்கரவாத அமைப்பையோ அல்லது அதன் உறுப்பினர்களை நினைவுக்கூரவோ இடமளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறவில்லை.

குறித்த வர்த்தமானியின் பிரகாரம் பயங்கரவாத மற்றும் தடைசெய்யப்பட்ட அமைப்புகளையோ அல்லது அதன் உறுப்பினர்களையோ நினைவுகூர முடியாது. அதேபோன்று குறித்த அமைப்புகளுக்காக நிதி சேகரித்தல், பிரசாரம் செய்தல், ஒருங்கிணைத்தல், கொடிகளை பயன்படுத்தல், சின்னங்களை பயன்படுத்தல், பாடல்களை பயன்படுத்தல் என அனைத்து விடயங்களும் இதன் ஊடாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணிகளின் பிரகாரம்தான் அரசாங்கம் செயலபடும். இதனையே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மிகவும் தெளிவாக ஊடகங்களுக்கு கூறியுள்ளார். ஆனால், உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர அனைவருக்கும் உரிமை உண்டு. இதற்கு தடையை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு அனுமதியில்லை. உறவுகளை நினைவுகூருவது என்பது வேறு புலிகள் அல்லது வேறு பயங்கரவாத அல்லது தடை செய்யப்பட்ட அமைப்புகளை மீள் உருவாக்கம் செய்வது என்பது வேறு.

அதனால் இந்த இரண்டையும் குழப்பங்களுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டாம். உயிரிழந்த உறவுகளை நினைவுகூர எவருக்கும் தடையில்லை" என்றார்.

## வடக்கு மாகாணத்தில்...

34 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 536 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 861 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் 56 குடும்பங்களைச் சேர்ந்த 175 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கின்றனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 135 குடும்பங்களைச் சேர்ந்த 442 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 50 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 12 ஆயிரத்து 629 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 910 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 459 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 547 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேநேரம் வவுனியா மாவட்டத்தில் 87 குடும்பங்களைச் சேர்ந்த 324 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

வவுனியாவில் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாயத் தொடங்கியுள்ளதுடன், தாழ்நிலப் பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பரந்தன் கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஒரு அங்கத்தவரும், புளியங்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பாதிப்படைந்துள்ளனர்.

வெண்கல செட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் அதிவேக காற்றின் காரணமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர் பாதிப்படைந்துள்ளதுடன், ஒரு வீடு பகுதியளவில் பாதிப்படைந்துள்ளது என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தின் 120 இற்கும் மேற்பட்ட குளங்கள் தனது முழுக்கொள்ளளவை எட்டி மேலதிக நீர் வெளியேறி வருவதுடன், அநேகமான குளங்களில் 90 சதவீதமான அளவு நீர் நிறைந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக, வேட்பாளர்களின் சொத்து மதிப்புகள் தொடர்பிலும் ஆணைக்குழுவில் முன்னிலைப்படுத்த வேண்டும்.

தேர்தல் முறைமையினுள் வெளிப்படைத்தன்மையை உருவாக்குவது மற்றும் ஏனைய வேட்பாளர்களுக்கு ஏற்படும் அசாதாரண நிலையை தடுக்கும் நோக்கில் இவ்வாறு செலவு அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## அம்பாறை...

அமைக்கப்பட்டு அங்கு இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டுவருவதாக அவர் கூறினார்.

உகன, மகாஓயா போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் மீட்பு பணிகள் இடம்பெறுவதாகவும் நாவிதன்வெளி கிட்டங்கி பாலத்தின் ஊடான போக்குவரத்து மற்றும் மாவடிப்பள்ளி அல்லிமுல்லை போன்ற பிரதான பாதைகள் உள்ளிட்ட பல பாதைகளின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆயினும் உயர்தரப்பரீட்சார்த்திகளின் நலன் கருதி பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்ற அவர் ஆலையடிவேம்பு பிரதேசத்திற்கு சென்று தற்காலிக தங்குமிட முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களையும் பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் உடன் சென்று பார்வையிட்டார்.

இது இவ்வாறிருக்க சாகாமம் பிரதான வீதியில் கூளாவடிக்கு அண்மித்த பிரதான வீதியில் நீர்வடிந்தோடும் இடத்தில் வாகனம் ஒன்று சிக்குண்டதையும் குடியிருப்புக்கள் மாத்திரமன்றி அரச அலுவலகங்களுக்குள்ளும் நீர் புகுந்துள்ளதையும் காண முடிந்தது.

வருகின்றனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரதேச செயலகம் மற்றும் சமூக அமைப்புக்கள் சில தனவந்தர்கள் இணைந்து உணவுப்பொதிகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கடலுக்கு செல்வதை மீனவர்கள் தவிர்த்து கிராமத்திற்குள்ளேயே நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட மக்களின் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் வகையில் தொலைபேசி இலக்கங்களை வழங்கியுள்ளதுடன் பாதிப்பு தொடர்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் உதவியோடு தகவல்களை சேகரித்து வருகின்றனர்.

# வடக்கு, கிழக்கு, மலையகம் வெள்ள அனர்த்தம்



மட்டு. மாவட்டம்
(வெள்ளாவெளி நிருபர்)











கிருஷாந்தன்

நாடு முழுவதும் பெய்துவரும் அடைமழையால் வடக்கு, கிழக்கு, மலையக பகுதிகளில் நேற்று ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமைகளைப் படங்களில் காணலாம்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 12ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** கடன் வாங்கியவர்கள் அதனை திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும்.

**ரிஷபம்** எல்லையில்லாத சக்தியும் மகிழ்ச்சியும் உங்களை தொற்றிக் கொள்ளும்

**மிதுனம்** நீண்டகாலம் நிலுவையாக உள்ள பாக்கிகள் வசூலாகும்.

**கடகம்** அனைத்து வாக்குறுதிகளும் நிதி பரிவர்த்தனைகளும் கவனமாக கையாளப்பட வேண்டும்.

**சிம்மம்** நீங்கள் நீண்ட பயணத்துக்கு திட்டல், அதிக பயன் அடையலாம்

**கன்னி** கடந்த காலங்களில், நீங்கள் முதலீடு செய்த பணத்தின் பலனை இன்று சிறப்பாக பயனடைவீர்கள் .

**துலாம்** உங்கள் பெற்றோர்களின் ஒருவர் உங்களை பணம் சேமிப்பை நிர்பந்திப்பார்

**விருட்சிகம்** வெளிநாட்டில் கிடக்கும் உங்கள் நிலத்தை இன்று நல்ல விலையில் விற்கலாம்

**தனுசு** எந்த முடிவும் எடுப்பதற்கு முன்பு நன்றாக சிந்திக்கவும்

**மகரம்** உங்களுக்கு நல்ல நேரம் காத்திருப்பதால் உற்சாகமாக இருங்கள்.

**கும்பம்** ஊகங்கள் அல்லது எதிர்பாராத லாபங்களால் நிதி நிலைமை மேம்படு.

**மீனம்** இன்று, ஒரு கடனாளர் உங்களைச் சந்தித்து உங்கள் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு கேட்கலாம

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** ஏகாதசி திதி அதிகாலை 05:23 யுஆ அதன் பிறகு துவாதசி திதி.
**நட்சத்திரம்:** அஸ்தம் நட்சத்திரம் காலை 06:35 யுஆ அதன் பிறகு சித்திரை நட்சத்திரம்.
**யோகம்:** மரண சித்த யோகம்..
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** பூரட்டாதி.
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** மதியம் 12:00 முதல் 01:30 வரை,
**குளிகை:** காலை 10:30 முதல் 12:00 வரை,
**எமகண்டம்:** காலை 07:30 முதல் 09:00

## பண்டாரவளையில் சுவர் இடிந்து விழுந்ததில் வயோதிபப் பெண் பலி!

சீரற்ற காலநிலையால் சுவரொன்று இடிந்து விழுந்ததில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டாரவளையில் நேற்றுக் (26) காலை 7 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. பண்டாரவளை பிரதேசத்தில் வசிக்கும் 61 வயதுடைய பெண் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பண்டாரவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய அமைச்சர்களுக்கு பழைய உத்தியோகபூர்வ வாகனங்கள்

கனூஷியா புஷ்பகுமார்

கடந்த அரசாங்கத்தில் அமைச்சர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனங்களை தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பயன்பாட்டிற்கு வழங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த அரசாங்கத்தின் போது அந்தந்த அமைச்சுகளுக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனங்களே அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, தற்போது வரையில் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள 344 அரச வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றுள் எட்டு வீ8 ரக அதிசொகுசு வாகனங்கள் காணப்படுவதாகவும் அவற்றை பராமரிக்க அரசாங்கம் அதிக தொகையை செலுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும், அந்த வாகனங்களை பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## செலவு அறிக்கைகளை முன்வைக்க தவறிய 4000க்கும் அதிக வேட்பாளர்கள்?

கனூஷியா புஷ்பகுமார்

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுள் அரைவாசிக்கும் அதிகமானோர் செலவு அறிக்கைகளை முன்வைக்க தவறியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

செலவு அறிக்கைகளை முன்வைப்பதில் மந்தமான ஒரு நிலை ஏற்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் மூலம் 8888 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர்.

தேர்தல் செலவு அறிக்கைகளை முன்னிலைப்படுத்தாத அனைத்து வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டதிட்டங்களின்படி, தேர்தல் நிறைவடைந்து 21 நாட்களுக்குள் அனைத்து செலவு அறிக்கைகளையும் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி, எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் குறித்த செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, வேட்பாளர்களின் சொத்து மதிப்புகள் தொடர்பிலும் ஆணைக்குழுவில் முன்னிலைப்படுத்த வேண்டும்.

தேர்தல் முறைமையினுள் வெளிப்படைத்தன்மையை உருவாக்குவது மற்றும் ஏனைய வேட்பாளர்களுக்கு ஏற்படும் அசாதாரண நிலையை தடுக்கும் நோக்கில் இவ்வாறு செலவு அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## ஆசிரியர் சம்பள பிரச்சினைகளுக்கு தீர்வு காண சுயாதீன ஆசிரியர் சபை

### கல்வியமைச்சு தீர்மானம்!!

முகம்மட் முக்தார்

ஆசிரியர்களது சம்பளம் அவர்களது தொழில் சார் பிரச்சினைகளை இனங்காணவும் ஆராயவும் சுயாதீன ஆசிரியர் சபையொன்றை அமைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இச்சுயாதீன சபையில் தொழிற்சங்க பிரதிநிதிகள், கல்வி அமைச்சு அதிகாரிகள், பொதுநிருவாக அமைச்சு, திறைசேரி பிரதிநிதிகள் ஆகியோர் அங்கத்துவம் பெறவுள்ளனர்.

இச்சபையானது சேவையிலுள்ள இலங்கை ஆசிரியர் சேவை, உத்தியோகத்தர்களது சம்பளம், சம்பள உயர்வு, சேவை நிபந்தனைகள் என்பன குறித்து எழும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து பொருத்தமான தீர்வுகளை அரசாங்கத்துக்கு காலத்துக்குக் காலம் முன்வைக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை உருவாக்கப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை ஆசிரியர் சேவை நிலையியல் குழு என்ற பெயரில் கல்வி அமைச்சில் இயங்கிவந்தது. ஆனால் காலப்போக்கில் இந்த நிலையியல் குழு செயலிழக்கச் செய்யப்பட்டு இல்லாமலாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகளில் 280,000 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களில் சுமார் 225,000 பேர் பெண் ஆசிரியைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குமாறு கோரிக்கை

கி.வசந்தன்

சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குமாறு இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவர் எஸ்.எம்.சிப்லி மற்றும் செயலாளர் யு.உபைதுல்லா ஆகியோர் இணைந்து குறித்த கோரிக்கை கடிதத்தை வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திரவிடம் நேற்று (26) கையளித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டமும் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்க முடியாத நிலை காணப்படுவதுடன், அவர்களும் மழைக்கு மத்தியில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதனால் ஏனைய மாவட்டங்களில் விடுமுறை வழங்கியதை போன்று வவுனியா மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# உக்ரேனில் தவிக்கும் தமிழ் இளைஞர்கள் : பொறுப்பு யார்?

மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று உழைக்க வேண்டும் என்ற மோகம் இன்று, நேற்று அல்ல காலங்காலமாக இலங்கைத் தமிழ் இளைஞர்கள், யுவதிகளிடம் காணப்படும் ஒன்றாகும். அதுவும் வடக்குக் கிழக்கு இளைஞர்கள் பெண்கள் மத்தியில் இந்த வெளிநாட்டு மோகம் அதிகமாகும்.

மூன்று யாழ். இளைஞர்கள் பலவந்தமாக ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்ட சம்பவம் தற்போது பேசுபொருளாகியுள்ளது.

பொதுவாகவே, இலங்கையில் நிலவும் ஸ்திரமற்ற அரசியல் மற்றும் பொருளாதார நிலை, போதிய வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களினால் வெளிநாட்டு மோகம் அதிகளவில் காணப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் 30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட பல நெருக்கடிகளாலும், உறவினர்களை இழந்தமை மற்றும் தங்கள் உடைமைகளையும் இருந்த இடங்களையும் இழந்த காரணங்களினாலும் அகதி அந்தஸ்து கோரி ஐரோப்பிய நாடுகளில் தமிழர்கள் தஞ்சம் கோரினர்.

எனினும், யுத்தம் நிறைவடைந்த பின்னரும் கூட இவ்வாறான காரணங்களை காட்டி தமிழ் இளைஞர் யுவதிகள் சட்ட விரோதமான முறையில் வெளிநாடு சென்றிருக்கின்றனர். தொடர்ந்து சென்று கொண்டேயிருக்கின்றனர்.

வெளிநாட்டில் உள்ள உறவினர்களும் இதற்கு ஒரு காரணம்.

வெளிநாடு செல்ல வேண்டும் என்ற நோக்கில் கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து இலக்கை அடைய முடியாமல் பலர் உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

சட்டவிரோத படகுகள், கொள்கலன்களில் சென்று துரதிரிஷ்டவசமாக உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணம் கரவெட்டி பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் ரஷ்யாவுக்கு செல்வதாக பல கோடி தொகையை செலவழித்து இறுதியில் அங்குள்ள இராணுவத்தினரின் பிடியில் சிக்கிய சம்பவம் குடும்பத்தினரையும் கேட்பவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

தனது மகனைப் பற்றி எதுவித தகவலும் அறியாத தாய், செய்வதறியாது கண்ணீர் வடிக்கிறார். இது ஒரு துர்ப்பாக்கிய நிலையாகும்.

நமது நாட்டு இளைஞர்கள் மற்றும் யுவதிகள் ஏனைய நாடுகளில் புகலிடம் கோருவதற்காக பல சட்டவிரோத முறைகளை கடைபிடிக்கின்றனர். இளைஞர்களின் இந்த ஆர்வத்தை போலியான முகவர்கள் தவறான விதத்தில் பயன்படுத்தி வருகின்றனர். பணம் மீது கொண்ட ஆசையினாலும், மோகத்தினாலும் இளைஞர்களை ஏனைய நாடுகளுக்கு ஆட்கடத்தி வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களால் ஒரு குடும்பம் மாத்திரமல்லாது ஒரு சமூகமே பாதிக்கப்படுகிறது. அவர்களை நம்பி வெளிநாடுகளுக்கு செல்பவர்களும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகி வருவதால், இதனை வெறும் செய்தியாக மாத்திரம் நாம் கடந்து விட முடியாது.

கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற அல்லது கட்டாய விடுமுறையில் சென்ற பல இராணுவத்தினர் மற்றும் சேவையை விட்டு விலகிய இராணுவத்தினர் உக்ரெய்ன் மற்றும் ரஷிய இராணுவத்தில் இணைந்து போர்களத்தில் போர் புரிந்திருந்தனர். அவர்களுள் சிலர் விரும்பி ஏற்று சென்றிருக்கின்றனர். மேலும் சிலர் பலவந்தமாக சேர்க்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக ஏற்கனவே முறைப்பாடு எழுந்துள்ள நிலையில், தற்போது தமிழ் இளைஞர்கள் போலியான முகவர்களிடம் ஏமாற்றப்பட்டு, அந்த நாடுகளின் இராணுவத்தில் இணைக்கப்படுவது வேதனை தரும் செய்தியாகும்.

வெளிநாடு செல்பவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் என எவருமே இதனை அறிவதில்லை, வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கோரி, இராணுவத்தில் சேர்த்துவிட்டு அவர்களிடம் பணத்தை பெற்றுக் கொள்ளும் சட்டவிரோத முறை தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றாலும், அது தொடர்பில் எதுவித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதில்லை. இந்த செயற்பாடுகள் ஒரு சட்டவிரோத வலைப்பின்னல் மூலமே இடம்பெற்று வருகிறது.

இவ்வாறான போலியான முகவர்களை நம்பி, வெளிநாடுகளுக்குச் செல்வதாக கூறி பல பெண்கள் துஷ்பிர யோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் இல்லாமலில்லை.


இந்த நிலை மாற வேண்டுமானால், அதனை நாம் ஒரு படிப்பினையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் காணப்படும் பொருளாதார நெருக்கடி காரணமாக கற்ற கல்விக்கேற்ற வேலை வாய்ப்போ, சரியான ஒரு வாழ்வாதாரமோ இல்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு விடயமாக பார்க்கப்பட்டாலும், அதற்கு வெளிநாடு செல்வது தான் தீர்வாக இருந்தாலும் அதனை சரியான சட்ட ரீதியான முறையில் அனுகுவதே ஒரு சிறந்த விடயம் ஆகும்.

பல ஆசைகளுடனும் கனவுகளுடனும் வெளிநாடுகளுக்கு பயணிக்கும் தமிழ் இளைஞர்கள் பாதியிலேயே இலக்கை அடைய முடியாமல் உயிரிழக்கும் சம்பவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால் அதற்கு இது மாதிரியான போலி முகவர்களை நம்பி சட்விரோத படகுகளிலும் ஏனைய தவறான வழி முறைகளிலும் செல்வதை நிறுத்த வேண்டும்.

முறையான சட்டதிட்டங்களுக்கேற்ப பணத்தை உரிய முறையில் செலுத்தி செல்வதானால் ஒரு குடும்பம் நிர்க்கதியாகும் நிலை ஏற்படாது.

இலங்கை அரசாங்கமும் இது தொடர்பில் அவதானம் செலுத்துவது அவசியமாகும். இளைஞர்களின் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி, அந்த பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கினால் நம் நாட்டு இளைஞர்கள் இவ்வாறு அவதியுறும் நிலை ஏற்படாது.




# இலங்கையை புரட்டிப்போடும் காலநிலை

## பாதிப்பிலிருந்து நம்மை பாதுகாத்து கொள்வது எப்படி..?

துு.சிந்துஜா

நாடளாவியரீதியில் மழையினால் மக்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கொழும்பு நகரை பொறுத்தவரையில் காலையிலேயே மழை பெய்யத் தொடங்கிவிடுகிறது. இதனால் அலுவலகம் செல்லும் பணியாளர்கள் பாடசாலை செல்லும் குழந்தைகள் என அனைவரும் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் தங்கள் பிரயாணங்களை முன்னெடுக்கின்றனர்.

அந்த வகையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக இடியுடன் கூடிய பலத்த மழை பெய்வதனால் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் அப் பகுதிக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த மூன்று நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் அப்பகுதியிலுள்ள வர்த்தகர்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

அதுமட்டுமின்றி வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்தமையினாலும் மக்கள் பெரிதும் சிரமத்துக் குள்ளாகியுள்ளனர்.

அதேபோல் மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையில் பெருக்கெடுத்த வெள்ளப்பெருக்கினால் சுமார் 12 ஆயிரத்து 485 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 879 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக 16 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி உயர் தர பரீட்சைக்கான மத்திய நிலையங்கள் இல்லாத பாடசாலைகள் மற்றும் மத ஸ்தலங்கள், பொது மண்டபங்கள் தற்காலிக பாதுகாப்பு நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இந்நிலையங்களில் 419 குடும்பங்களைச் சேர்ந்த 1426 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் சிலர் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதோடு, வெள்ள நீரை கடலுக்கு வெளியேற்றும் நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் அதற்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க முப்படையினரும் தயார் நிலையில் உள்ளனர்.

அடுத்துவரும் இரண்டு, மூன்று தினங்களுக்கு வடக்கு மாகாணத்தின் சகல பகுதிகளிலும் 350 மில்லிமீற்றர் வரையில் பலத்த காற்றுடன் மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் திறந்த வெளியில் வளர்க்கப்படும் கால்நடைகள், கோழிகள் ஆகியன பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களும் அதிகம்.

எனவே, கால்நடைகளை பாதுகாப்பதற்காக பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

குளிர் காற்று, கடும் மழை போன்ற வற்றிலிருந்து கால்நடைகளை பாதுகாக்க கொட்டகைகள் மற்றும் மேடான நிலங்களில் பாதுகாப்பாக அடைத்து வைத்தல்.

உடலை வெப்பத்துடன் கதகதப்பான இடத்தில் வைத்து பராமரித்தல்.

கால்நடைகள் நோய்வாய்ப் பட்டிருந்தால், உடனே கால்நடை மருத்துவரை நாட வேண்டும்.

கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களை முன்கூட்டியே கையிருப்பில் வைத்திருத்தல் அவசியம்.

கால்நடைகள் இறந்து போனால் பண்ணைப்பதிவு இலக்கம் மற்றும் காது இலக்கம் ஆகியவற்றுடன் இறப்பை உறுதி செய்யும் வகையில் புகைப்படங்களுடன் கால்நடை மருத்துவ பணிமனைக்கு தகவல் வழங்க வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியிலுள்ள வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் நெற் செய்கை முழுமையாக அழிவடைந்ததாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கன மழையின் காரணமாக 248 குடும்பங்களைச் சேர்ந்த 717 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமட்டுமின்றி நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அத்துடன் வெள்ள நீருடன் முதலைகளும் வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் பதுளை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. சீரற்ற வானிலை நிலவுவதால் மலையக வீதிகளில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.



இவ்வாறு நாட்டின் பல பகுதிகளிலும் சீரற்ற வானிலையால் மக்கள் அவதியுறுகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டியது அவசியம் என்பதோடு சுய பாதுகாப்பும் அவசியம்.


தாங்கள் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் எனும் பட்சத்தில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டவுடன் அவ் இடத்தை விட்டு வெளியேறுவது சிறந்தது. அதைவிடுத்து, வெள்ள நீர் வீடுகளுக்குள் நுழையும் வரையில் காத்திருக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதுவும் குறிப்பாக வீடுகளில் குழந்தைகள், வயதானவர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களின் நிலை இன்னமும் நெருக்கடிக்கு உள்ளாகும். வெள்ள நீரினால் ஏற்படும் அசௌகரியம் ஒருபுறம் என்றால் அதிலிருந்து ஏற்படும் நோய்களும் அதிகம்.

வெள்ள நீர் அசுத்தமானது என்பதால் அவற்றிலிருந்து பல தொற்றுக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

மேலும், மழை பெய்தால் பாதிப்பு ஏற்படும் எனும்போது எப்பொழுதும் வீடுகளில் டோர்ச் லைட், மெழுகுதிரி, உலர் உணவுப் பொருட்கள் போன்றவற்றை சேமிப்பில் வைத்திருப்பது நல்லது. முடியுமான அளவு வீடுகளை புனரமைக்கும்போது மேட்டு நிலத்தில் கொஞ்சம் உயரமாக வெள்ள நீரிலிருந்து பாதுகாப்பைப் பெறும் வகையில் அமைத்துக்கொள்வது சிறந்தது.

எனவே, முடியுமானவரையில் அனர்த்தங்கள் ஏற்படும் முன் நம்மை காத்துக்கொள்ள முயற்சிப்போம்.



# வாசஸ்தலங்களை கையளிக்காது வெளிநாடு சென்ற முன்னாள் எம்.பிக்கள்

கனூஷியா புஷ்பகுமார்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேர் மாதிவலயில் உத்தியோகபூர்வ இல்லங்களை மீள வழங்காது வெளிநாடு சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்காரணமாக, உத்தியோகபூர்வ இல்லங்களை மீள பொறுப்பேற்கும் நாடாளுமன்ற அதிகாரிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

சுமார் 80 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது வரையில் உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைத்துள்ள நிலையில் மேலும் 20 உறுப்பினர்கள் இல்லங்களை மீள ஒப்படைக்கவுள்ளதாக நாடாளுமன்ற அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். விரைவில் அந்த இல்லங்களை மீள ஒப்படைக்குமாறு, குறித்த உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற அதிகாரிகள் பலமுறை ஞாபகப்படுத்தியுள்ளனர்.

மாதிவலவீட்டுத்தொகுதியில்வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறும் நாள் வரையிலேயே காலக்கெடு வழங்கப்பட்டிருந்தது.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதிவல உத்தியோகபூர்வ இல்லங்கள் எதிர்வரும் 3ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.40 புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களை கோரியுள்ளனர்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்லங்களை தமது நிறுவனங்களை நடத்த வாடகைக்கு வழங்குமாறு திணைக்கள மற்றும் அரச நிறுவனங்கள், தொழிலாளர் அமைச்சிடம் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருவதாக அறியக் கிடைத்துள்ளது.

சுமார் 10 திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் தற்போது வரையில் இவ்வாறு உத்தியோகபூர்வ இல்லங்களை வாடகைக்கு வழங்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது தனியார் கட்டிடங்களில் தமது நிறுவனங்களை நடத்திச் செல்லும் நிறுவனங்களே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளன.

எவ்வாறாயினும், இது தொடர்பில் அரசாங்கம் எதுவித தீர்மானங்களும் மேற்கொள்ளவில்லை என அறியக்கிடைத்துள்ளது.

மேலும், முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை 35 ஆகும். அவை அனைத்தும் தற்போது அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை புதிய அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு வழங்குவது தொடர்பிலும் இதுவரையில் தீர்மானம் மேற்கொள்ளவில்லை என செய்திகள் வெளியாகியுள்ளன.

# வத்தளை சாய் பஜன் மண்டல் பூஜைகளும் பஜனைகளும்






பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் 99வது ஜனன தினத்தையொட்டி வத்தளை சாய் பஜன் மண்டலயினரால் பூஜைகளும் பஜனைகளும் நடந்தப்பட்டன. மண்டலியின் தலைவர் எம். என். ராஜா தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் பக்தர்களுக்கு பகல்போசனமும் பிரசாதமும் வழங்கப்பட்டன.

# சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்கு உதவிகோரல்

குருநாகல் மாவட்டம்,கொபெய்கனே பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்பொதுவெவயில் வசிக்கும் ஒரு பெண் பிள்ளையின் தந்தையான எம். ஆர்.எம்.ரிஸ்வி (வயது 43) என்பவர் இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் தற்போது இரண்டு நாளுக்கொருமுறை இரத்த மாற்று சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். இவரை பரிசோதனை செய்த விசேட வைத்திய நிபுணர்; இவருக்கு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்கென பெருந்தொகைப் பணம் செலவாகுமெனவும் பரிந்துரை செய்துள்ளார்.

மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த அவரது குடும்பத்தினரால் மேற்படி சத்திர சிகிச்சைக்கான நிதியை திரட்ட முடியாததால் பரோபகாரிகளின் உதவியை குடும்பத்தினர் நாடுகின்றனர்.

உதவி செய்ய விரும்புவோர் இலங்கை வங்கி 71598420 கணக்கு இலக்கத்துக்கு வைப்பிலிடுமாறும் மேலதிக விபரங்களுக்கு 0775370137இ 0776949129 மற்றும்0767477545 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தாழ்மையுடன் வேண்டப்படுகின்றனர்.

# சர்வதேச அரபு மொழி தினம்; பிரதமருக்கு நன்றி செலுத்திய மக்கள் மறுமலர்ச்சி முன்னணி

எம்.யூ.எம்.சனூன்




சர்வதேச அரபு மொழி தினத்தை முதல் தடவையாக பாடசாலை மட்டத்தில் கொண்டாடும் வகையில் புதிய அரசாங்கத்தின் கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்நடவடிக்கைகளை மேற்கொண்ட அமைச்சரும், பிரதமருமான கலாநிதி ஹறிணி அமரசூரியவுக்கு மக்கள் மறுமலர்ச்சி முன்னணி நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

கடந்த காலங்களில் வீதியில் இருந்த பெயர் பலகைகளில் இந்த அரபு மொழி வாசகங்களை கொண்ட எழுத்துக்களை அழிக்க வேண்டும் என்று தீய சக்திகள் முனைப்பு காட்டி பல இடையூறுகள் விளைவித்தனர்.

அந்த வகையில் புதிய அரசாங்கம் அரபு மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து சர்வதேச அரபு மொழி தினத்தை முதல் தடவையாக பாடசாலை மட்டத்தில் கொண்டாடும் வகையில் விழிப்பூட்டல்களை மேற்கொள்வது முஸ்லிம் சமூகத்திற்கு கிடைத்த பெரும் பேறாக மதிக்க வேண்டும்.

எனவே, இந்த சந்தர்ப்பத்தில் இந்நாட்டின் பிரதமரும் அமைச்சருமான கலாநிதி ஹறிணி அமர சூரியவுக்கு மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் பிரதி தலைவர் மௌலவி சுபியான் நன்றியை தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் தினங்களில் சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் விடுமுறை ஆரம்பிப்பதால் 18.12.2024 ம் திகதி அரபு மொழி தினத்தை 21.11.2024 ஆம் திகதி அனுஷ்டிக்க தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு கல்வி துறை சார் அதிகாரிகளுக்கு சுற்று நிருபம் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அஸ்வெசும விண்ணப்ம் பெற பிரதேச செயலகத்தில் மக்கள் கூட்டம்



எம் எச் எம் சியாஜ்

அஸ்வெசும விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வதற்காக மேலதிக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (25) அதிகமான மக்கள் சமூகமளித்திருந்தனர்.

புதிதாக அஸ்வெசும விண்ணப்பிப்பவர்கள் மற்றும் முன்னர் விண்ணப்பித்தும் தெரிவு செய்யப்படாதவர்கள் அனைவரும் கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு சமூகமளித்திருந்த நிலையில், புதியவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரம் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் பெறப்பட்டது.

ஏற்கனவே விண்ணப்பித்தும் தெரிவு செய்யப்படாதவர்கள் புதிய விண்ணப்பப் படிவத்தை நிரப்பி தமது கிராம உத்தியோகத்தர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து மக்கள் திரும்பி சென்றதை அவதானிக்க முடிந்தது.

# மீலாதுன் நபி விழா, எழுத்தணி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு

எம்.யூ.எம்.சனூன்



சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் 71வது ஆண்டு மீலாதுன் நபி விழா மற்றும் ஹிப்ழ், பேச்சு போட்டி, மல்டிமீடியா வழங்கல் மற்றும் அரபு எழுத்தணி போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. இதற்கான பரிசளிப்பு விழா கொழும்பு 06, வெள்ளவத்தை, ஷெய்கா பாத்திமா கட்டடத்தின் மர்லீன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் தலைவர் ஒமர் காமில் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் டாக்டர் அலிரேசா டெல்கோஷ் மற்றும் திருமதி டெல்கோஷ் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகளை வழங்கினர்.

பேச்சு போட்டியில் வெற்றி பெற்றவர்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.




கொரியா தொழில் விவகாரம்

# போராட்டத்தில் ஈடுபட்டோர் ஜனாதிபதி செயலகத்துக்கு மகஜர்

ஈ8 விசாவில் தென்கொரியாவில் தொழிலை எதிர்பார்த்துள்ளவர்களும், ஏற்கனவே கொரியாவில் தொழில் செய்துவிட்டு விடுமுறையில் வந்து மீண்டும் அங்கு செல்ல முடியாமல் இருப்பவர்களும் மூன்றாவது நாளாக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் (25) , இப்பிரச்சினைக்கு தீர்வு தேடி போராட்டக்காரர்கள் அனைவரும் ஜனாதிபதி செயலகத்திற்கும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும் சென்று தமது பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகளை உள்ளடக்கிய மனுக்களை சமர்ப்பித்தனர்.

ஈ 8 விசாவில் தென் கொரியாவுக்கு தொழில் நிமித்தம் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள சிலர், அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக கொரியாவில் தொழிலுக்கு செல்ல இருந்த வாய்ப்பு இல்லாமல் போயுள்ளதாக தெரிவித்து, பத்தரமுலலையில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு முன்னால் சத்தியக்கரக போராட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டவந்தவர்களில் சிலரை அமைச்சர் விஜித ஹேரத் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஈ8 விசாவில் தென்கொரியாவுக்கு தொழிலுக்கு செல்வதை சட்ட ரீதியாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

என்றாலும் தென்கொரியாவுக்கான தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளதை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியம் அதனை மறைத்து வருவதாகவும் இதனால் அவர்கள் தொழிலுக்கு செல்ல வேண்டிய காலம் நிறைவடைய இன்னும் சில நாட்களே இருப்பதால், காலத்தை நீடித்து வழங்குமாறு தெரிவித்தும் இவர்கள் போராட்த்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் ஈ8 விசாவில் தொழிலுக்கு அனுப்புவது சட்டவிரோத செயல், அதனால் அதனை அனுமதிக்க முடியாது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# புத்தளம் தள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருவோருக்கு தேநீர்



எம்.யூ.எம்.சனூன்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் ஏற்பாட்டில் புத்தளம் தள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு ஒவ்வொரு நாளும் இலவசமாக தேநீர் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த தேநீர் விநியோக திட்டமானது 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேக் ஜிப்னாஸ் அல்மிஸ்பாஹி தலைமையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இன, மத நல்லிணக்கத்தை முன்னிட்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை இவ்வாறான ஏற்பாட்டை செய்துள்ளது.

இந்த மாதம் கடைசி வரை தேவையான சீனி தேயிலை என்பனவும், 16 தேநீர் தயாரிக்கும் கேத்தல்களும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேக் ஜிப்னாஸ் அல்மிஸ்பாஹினால் வைத்திய சாலையின் உயர் அதிகாரியிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இதன் சீரான சேவைகள் தொடர்பாக ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் அங்கத்தவர்களான அஷ்ஷேக் ஸனூஸ் (அஷ்ரபீ),அஷ்ஷேக் ஸல்மான் (இஹ்ஸானி), அஷ்ஷேக் ரகீப் அஹ்மத் (ரஷாதீ) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.இந்நிகழ்வுக்கு சமூக சேவையாளர் முஹம்மது முஜிபர், புத்தளம் வர்த்தக சங்கத்தின் தலைவர் வை.எம். நிஸ்தார், சஹீரியன்ஸ் மிலேனியம் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் முஹம்மது பஹ்மி, சிட்டி போய்ஸ் போன்ற சமூக நலன் விரும்பிகள் மற்றும் ஜம்இய்யாவின் செயலாளர், உறுப்பினர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



தாமோதரம் சுதாகரன்

# சர்வதேச பொறிக்குள் நெத்தன்யாகு: கைதாவாரா ?



கடந்த வருடம் முதல் இஸ்ரேல் ஹமாஸ் இடையே ஆரம்பமான போர் ஓராண்டிற்கும் மேலாகத் தொடர்ந்துவரும் நிலையில் இந்த போரால் பெரிதாகப் பாதிக்கப்பட்டுவது காசாவில் உள்ள அப்பாவி பொதுமக்களே .

அத்துடன் இந்த போரில் பல அப்பாவி பொதுமக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு பல இலட்சம் பேர் வெளியேறினர். இதற்கிடையே இந்த போரில் மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் போர்க் குற்றங்கள் நடந்ததாகவும் புகார்கள் கூறப்பட்ட நிலையில் இது தொடர்பான வழக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

குறித்த வழக்கு விசாரணையின் பின்னர் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடி விறாந்து பிறப்பித்தது. கொலை, துன்புறுத்தல் உள்ளிட்ட போர்க் குற்றங்களுக்காக விறாந்து பிறப்பிப்பதாகக் அதில் கூறப்பட்டுள்ளது. அதேபோல இஸ்ரேல் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோவ் கேலன்ட், ஹமாஸ் தலைவர் முகமது தியாப் இப்ராஹிம் அல்–மஸ்ரி ஆகியோருக்கு எதிராகவும் பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்டது.

கடந்த வருடம் முதல் பாலஸ்தீனத்துக்கும் – இஸ்ரேலுக்கும் இடையே நடந்து வரும் இந்த போரில் இதுவரை காஸாவில் மட்டும் பெண்கள், குழந்தைகள் உள்பட 44,000 பேர் உயிரிழந்துள்ள அதேவேளை, இந்த உயிரிழப்பானது லெபனானில் 3,500–ஐ கடந்துள்ளது.

தொடர்ந்தும் நடைபெற்றுவரும்இந்த போரில் மனித உரிமை மீறல்களை இஸ்ரேல் மீறுவதாக எழுந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் சர்வதேச நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்தது. அதன் அடிப்படையில், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு நீதிமன்றம் மேற்படி தீர்ப்பை வழங்கியிருந்தது. ஆனால் இந்த தீர்ப்பு குறித்து விமர்சித்திருந்த இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, இது “யூத வெறுப்புடன் எடுக்கப்பட்ட முடிவு.” என குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே இஸ்ரேலை விட்டு வெளியே வந்தால் நெதன்யாகு கைது செய்யப்படுவாரா? என்ற கேள்வியே தற்போது உலகம் பூராவும் எழுப்பப்படும் கேள்வியாகும் . ஆனால், விதியின்படி சர்வதேச நீதிமன்றம் என்பது 1998இல் போடப்பட்ட ரோம் உடன்படிக்கையின் கீழ் உருவாக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி உறுப்பு நாடுகள் சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவைச் செயல்படுத்த வேண்டும். அதன்படி நெதன்யாகு எந்தவொரு உறுப்பு நாட்டிற்கு வந்தாலும் அவரை கைது செய்து காவலில் வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. ஆனால், சர்வதேச நீதிமன்றத்தால் அதன் அதிகாரத்தை உறுப்பு நாடுகளின் மீது திணிக்க முடியாது.

மேலும், சர்வதேச நீதிமன்றத்திற்கு எனத் தனியாக பொலிஸ் அமைப்பு இல்லை. எனவே, நெதன்யாகுவை கைது செய்ய அவர்கள் ஐநா உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பை நம்பியிருக்க வேண்டும். அதாவது சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக ஐநா உறுப்பு நாடுகள் நெதன்யாகுவை கைது செய்ய வேண்டும் என்பதே விதி. ஆனால், அப்படி கைது செய்யவில்லை என்றாலும் சர்வதேச நீதிமன்றத்தால் எதுவும் செய்ய முடியாது.

ஆனாலும் ஐநா சபையில் இருக்கும் பல உறுப்பு நாடுகள் இஸ்ரேலின் நட்பு நாடுகளாக உள்ளன. குறிப்பாகப் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் இஸ்ரேலுடன் நெருங்கிய உறவைக் கொண்டு இருக்கிறது. இதனால் அந்த நாடுகள் நிச்சயம் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை கைது செய்ய வாய்ப்பில்லை. அதேவேளை அமெரிக்கா இந்த சர்வதேச நீதிமன்றத்தின் உறுப்பு நாடு இல்லை. இதனால் அமெரிக்கா சென்றாலும் கைதாக வாய்ப்பில்லை.

அதேபோன்று எல்லா நாடுகளும் கைது நிலைப்பாட்டை எடுக்கவில்லை. தங்கள் நாட்டிற்கு நெதன்யாகு வந்தால் நிச்சயம் கைது செய்வோம் எனப் பல நாடுகள் கூறியுள்ளன. அதில் அயர்லாந்து, இத்தாலி, நெதர்லாந்து, கனடா, ஸ்பெயின் நாடுகள் நிச்சயம் கைது செய்வோம் எனக் குறிப்பிட்டுள்ளன.

**நெதன்யாகு எந்தவொரு உறுப்பு நாட்டிற்கு வந்தாலும் அவரை கைது செய்து காவலில் வைக்க சர்வதேச நீதிமன்றம் நிர்ப்பந்தித்துள்ளது...!**

நார்வே, ஸ்வீடன், பெல்ஜியம், துருக்கி, சீனா உள்ளிட்ட நாடுகள் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்பதாக மட்டும் கூறியுள்ளன.

குறிப்பாக நெதன்யாகு இங்கிலாந்து வந்தால், இங்கிலாந்து பொலிர் அவரை கைது செய்யுமா? என இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மரின் செய்தித் தொடர்பாளரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிகையில் நெதன்யாகு பெயரைக் குறிப்பிடாமல் “உள்நாட்டுச் சட்டம் சர்வதேச சட்டத்தை எப்படி அணுக வேண்டும் என்ற வரையரை உள்ளது. அதன்படி இங்கிலாந்து சட்டத்தின் கீழ் எங்கள் கடமைகளை வெளிப்படையாக நிறைவேற்றுவோம்” எனக் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச நீதிமன்றம் உருவாக்கிய சர்வதேச ஒப்பந்தமான ரோம் சட்டத்தில், பிரிட்டன் 1998 இல் கையெழுத்தி ட்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே பிரிட்டன் அதனை ஏற்றுக் கொண் டது. இங்கிலாந்தின் ஐசிசி சட்டம் 2001இன் படி, ஒரு அரசின் தலைவர், அல்லது அதிகாரி சர்வதேச நீதிமன்றத்தால் குற்றம்சாட்டப்பட்டால், அதற்குரிய ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். சர்வதேச நீதிமன்றத்தால், பொருத்தமான நீதிபதி கைது பிடியாணை பிறப்பித்திருக்கிறார் என இங்கிலாந்து அரசு முடிவு செய்தால், அதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சர்வதேச நீதிமன்றத்தால் குற்றம்சாட்டப்பட்டவர்களில் இதுவரை யாரும் இங்கிலாந்து செல்லாததால் இன்றுவரை அந்தச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடதக்கது. இதேவேளை , ஐரோப்பிய ஒன்றியத்தைப் பொறுத்தவரை இந்த முடிவை வரவேற்பதாகக் கூறியுள்ளது. இது தொடர்பாக ஐரோப்பிய ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கை செயலாளர் ஜோசப் பொரெல் , ”இது ஒரு அரசியல் முடிவு இல்லை. இது ஒரு நீதிமன்றம்.. முறையாக விசாரணை நடத்தி இந்த தீர்ப்பை அளித்துள்ளனர். சர்வதேச நீதிமன்றத்தின் இந்த முடிவை மதிக்கிறோம். இதை நாங்கள் நிச்சயம் நடைமுறைப்படுத்துவோம்” என்று கூறியுள்ளது. இஸ்ரேல் பிரதமர், அந்நாட்டின் முன்னாள் பாதுகாப்பு துறை அமைச்சர் மற்றும் ஹமாஸ் ராணுவ தளபதிக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) நீதிபதிகள் ஜபிடிவிறாந்து பிறப்பித்துள்ளனர்.

இதனிடையே, இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு எதிராக நடைபெறும் போரில், போர் குற்றங்கள் மற்றும் மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்களுக்கு இம்மூவரும் ”பொறுப்பானவர்கள்” என்ற குற்றச்சாட்டுக்கு ”நம்பத்தகுந்த ஆதாரங்கள்” உள்ளதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7 அன்று, ஹமாஸ் அமைப்பினர் தெற்கு இஸ்ரேலில் நடத்திய தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டதுடன், 251 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இந்த தாக்குதல் சம்பவம்தான் இவர்களுக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்க கோரும் மனுவுக்கு அடிப்படை காரணியாக அமைந்தது. ஆனால் மேற்படி பிடிவிறாந்து அறிவிபானது இஸ்ரேலின் முக்கிய தலைவர்களின் கோபத்தைத் அதிகரித்துள்ள அதேசமயம், ஹமாஸ், பாலத்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புகள் மற்றும் காஸாவின் பொதுமக்கள் இந்த அறிவிப்பை வரவேற்றுள்ளனர். ”நீதி மற்றும் மனிதநேயத்துக்கு ஓர் இருண்ட நாள். ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்திற்குப் பதிலாக இந்த முடிவு, பயங்கரவாதம் மற்றும் தீமையின் பக்கம் சென்றுள்ளது” என இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் குற்றசம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# ஜனாதிபதியின் கொள்கை விளக்கம் : தமிழ் தலைமைகளின் அதிருப்தி



தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்படவில்லை என வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

புதிய அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை முன்வைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நவம்பர் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய நீண்ட உரையில் தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான யோசனைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, மக்களின் நீண்டகால விருப்பமான தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கு மிகவும் வலுவான சந்தர்ப்பம் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், பொதுத் தேர்தலில் 65,458 வாக்குகளைப் பெற்று மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வெற்றி பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், புதிய அரசாங்கம் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு வழங்கும் தீர்வுகள் குறித்து ஜனாதிபதி நேரடியாகக் குறிப்பிடவில்லை என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.



“நேரடியாக தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பிலோ நேரடியாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாகவோ அதிகாரப் பகிர்வு தொடர்பிலோ பொறுப்புக்கூறல் விடயத்தில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது தொடர்பிலோ சொல்லவில்லை. ஆனால் கடந்த காலத்திலே ஜனாதிபதிகள் இவ்வாறான விடயங்களை செய்தியில் சொல்லியிருந்தாலும் கூட நடைமுறையில் எதனையும் செய்யவில்லை.”

பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திப் போட்டியிட்டு 11,215 வாக்குகளைப் பெற்று முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட துரைராசா ரவிகரன், தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விரைவில் ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

“எங்களுடைய வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் தொடர்பில் கூடுதலான கருத்துகள் சொல்லப்படவில்லை. இருந்தாலும் மிகக்கூடிய விரையில் ஜனாதிபதியையும் பிரதமரையும் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் சந்திப்பதற்கு நேரம் கேட்பதற்கு இருக்கின்றோம். இதன்போது எமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவோம்.”

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற, 5,695 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவான செல்வம் அடைக்கலநாதன், ஜனாதிபதிக்கு பூரண ஆதரவை வழங்க விரும்புவதாக தெரிவித்ததோடு, இனப்பிரச்சினை குறித்து ஜனாதிபதி கருத்து வெளியிடாமை கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

“புதிய ஜனாதிபதியின் உரை வரவேற்கத்தக்கது. விவசாயம், மீன்பிடித் துறையில் கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இருந்தும் இனப்பிரச்சினை சார்ந்த விடயத்தை அவர் கதைக்கவில்லையே என்ற கவலை இருக்கின்றதே ஒழிய மற்றபடி அவரது உரையிலே இந்த நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கான உரையாக இருக்கிறது. அதற்கு நாங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாரா இருக்கின்றோம்.”

நாட்டில் இனவாத அரசியலுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையில் உறுதியளித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இலங்கையில் சர்ச்சைக்கு வழிவகுத்த குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதாக நாடாளுமன்றத்தில் உறுதியளித்திருந்தார்.

மக்களின் நீண்டகால விருப்பமான தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கு மிகவும் வலுவான சந்தர்ப்பம் தற்போது உருவாகியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டில் இனவாத அரசியலோ அல்லது மத தீவிரவாதமோ மீண்டும் தலைதூக்க இடமளிக்க மாட்டோம் எனவும் வலியுறுத்தினார்.

**தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு, இனப்பிரச்சினை, அதிகாரப் பகிர்வு தொடர்பான பொறுப்புக்கூறல் விடயத்தில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது தொடர்பிலோ சொல்லவில்லை.**

“இலங்கையில் மீண்டும் இனவாத அரசியலுக்கு எமது நாட்டில் இடமில்லை என்றும் எந்தவொரு மதவாதத்திற்கும் இடமில்லை. ஆனால் எமது நாட்டில் மீண்டும் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக இனவாத, மதவாத, கோஷங்களை எழுப்புவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது என நான் உறுதியளிக்கிறேன்.”

சட்டத்தின் மீது மக்களின் உடைந்த நம்பிக்கை மீண்டும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, யாரையும் பழிவாங்கும் எண்ணமோ, யாரையும் துரத்தி வேட்டையாட வேண்டுமென்ற நோக்கமே இல்லையெனவும், சுதந்திரமாக அரசியல் செய்யும் உரிமையை அனைவருக்கும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

# மன்னாரில் 43,000க்கும் அதிகமானோர் பாதிப்பு




மன்னார் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு காரணமாக 12 ஆயிரத்து 485 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 879 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை (25) வரை குறித்த எண்ணிக்கையுடைய மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மாவட்டத்தில் 16 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர் தர பரீட்சைக்கான மத்திய நிலையங்கள் இல்லாத பாடசாலைகள் மற்றும் மதஸ்தலங்கள், பொது மண்டபங்கள் இவ்வாறு தற்காலிக பாதுகாப்பு நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

குறித்த நலன்புரி நிலையங்களில் 419 குடும்பங்களைச் சேர்ந்த 1426 பேர் இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். வெள்ள நீரை கடலுக்கு வெளியேற்றும் நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அனர்த்தங்கள் ஏற்பட்டால் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள முப்படையினரும் தயார் நிலையில் உள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாட் பதியுதீன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதோடு, மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உதவிகளை முன்னெடுக்க உரிய அதிகாரிகளை பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் 248 குடும்பங்கள் பாதிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக 248 குடுப்பங்களைச் சேர்ந்த 717 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் நேற்று முன்தினம் பெறப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களில் குறித்த விடயம் பதிவாகியுள்ளது.

பாதிப்புக்கள் தொடர்பாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பிரமந்தனாறு குளம் வான்பாயத் தொடங்கியிருப்பதால் பிரமந்தனாறு குளத்தின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

# மன்னார் நலன்புரி நிலையங்களில் சுகாதார கண்காணிப்பு நடவடிக்கை

## வைத்திய கலாநிதி கே.சுதாகர் தெரிவிப்பு

(மன்னார் நிருபர் வாஸ் கூஞ்ஞ)



மன்னாரில் வெள்ளப் பெருக்கு காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இருக்கும் மக்கள் நலன் கருதி அப்பகுதியில் சுகாதாரத்தைப் பேணும் வகையில் குடிநீர், உணவு விடயங்களில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு வைத்திய அதிகாரி கதிர்காமநாதன் சுதாகர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மன்னார் பெரும்பாலான கிராமங்கள் வெள்ளக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.வெள்ளம் காரணமாக அதிகமான வீடுகளிலுள்ள மலசல கூடங்கள் நிரம்பி வெள்ளநீருடன் கலந்து பரவி வருவதால் நோய்கள் பரவும் அபாயமும் காணப்படுகின்றது.

வெள்ளநீர் வற்றியபின் தீவிரமான முறையில் சுகாதாரத்தைப் பேணுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது எனத் தெரிவித்துள்ள வைத்திய அதிகாரி கே.சுதாகர்,மன்னாரில் இரு டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் வெள்ளப் பெருக்கு காரணமாக இப்பகுதியில் டெங்கை கட்டுப்படுத்துவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பில் தொடர் மழை இயல்புநிலை பாதிப்பு

(புதுக்குடியிருப்பு நிருபர்)

புதுக்குடியிருப்பு பகுதியில் தொடர்சியாக மழை பெய்து வருவதனால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த மூன்று நாட்களாக தொடர்ச்சியான மழை பெய்து வருகின்றது.

இதனால் புதுக்குடியிருப்பு நகர் பகுதிகளில் உள்ள வர்த்தகர்கள் , போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் அன்றாட வேலையில் ஈடுபடமுடியாது பாரிய சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

அங்காங்கே வெள்ளநீர் அதிகரித்து காணப்படுவதனாலும், வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்தமையினாலும் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்துள்ளது. தொடர்ச்சியாக பெய்துவரும் மழையினால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள், புதுக்குடியிருப்பு மக்கள், வர்த்தகர்கள் என அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# சிறப்பான பந்துவீச்சை பதிவு செய்த ஆகாஹ்ஷுக்கு வடக்கு ஆளுநர் வாழ்த்து



இலங்கை 17 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து, மிகச் சிறப்பான பந்துவீச்சை பதிவு செய்த யாழ். ஹாட்லி கல்லூரியின் மாணவன், விக்னேஸ்வரன் ஆகாஹ்ஷுக்கு வட மாகாண நா.வேதநாயகன் வாழ்த்துத் தெரிவித்தார்.

ஆகா தொலைபேசியூடாக தொடர்புகொண்ட ஆளுநர், அவரை வாழ்த்தியதுடன் எதிர்காலத்தில் இலங்கை கிரிக்கெட் அணியில் இடம்பிடிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார். தொடர்ந்து சாதனைகளைப் படைக்கவேண்டும் என்றும் ஆளுநர் ஆகாஷிடம் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆட்டத்தில் விளையாடிய ஆகாஷ், 5 இலக்குகளை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் 7 குடும்பங்களை சேர்ந்த 24 பேர் பாதிப்பு!

(கி.வசந்தன்)

தொடர் மழை காரணமாக வவுனியாவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக வவுனியாவில் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாயத் தொடங்கியுள்ளதுடன், தாழ் நிலப்பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பரந்தன் கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அங்கத்தவரும், புளியங்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பாதிப்படைந்துள்ளனர்.

வெண்கல செட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் அதிவேக காற்றின் காரணமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேர் பாதிப்படைந்துள்ளதுடன், ஒரு வீடும் பகுதியளவில் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கிவைப்பு

(கரவெட்டி நிருபர் ஆ. நரேன்)



யாழ்ப்பாணத்தில் பெய்துவரும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கல்லுண்டாய் ஜே135,ஜே136 கிராமசேவகர் பிரிவில் வசிக்கும் 59 குடும்பங்களுக்கு ரூபா 2,95,000 பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப்பொருட்களை தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கிவைத்தது.

அத்துடன் கல்லுண்டாய் பகுதியைச் சேர்ந்த தரம் 7 இல் கொட்டடி நமச்சிவாய வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவனுக்கு 45,000 ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டி ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டது.

கல்லுண்டாய் ஐக்கிய சனசமூக நிலைய தலைவர்,க.செந்தூரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இவ் உதவிகள் வழங்கும் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் கலந்துகொண்டு உதவிகளை வழங்கிவைத்தார். இதில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

# இலத்திரனியல் வாக்களிக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்து வவுனியா மாணவன் சாதனை

## -தேர்தலில் பயன்படுத்த ஜனாதிபதிடம் கோரிக்கை

(கி.வசந்தன்)

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் தரம் 9 இல் கல்வி பயிலும் சி.கபிலாஸ் என்ற மாணவன் இலத்திரனியல் வாக்களிக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில் இடம்பெறும் ரொபோட்டிக் தொடர்பான புத்தாக்கப் போட்டியினை முன்னிட்டு வவுனியா விபுலானந்தா கல்லூரியில் தரம் 9 இல் கல்வி பயிலும் 14 வயதுடைய சி.கபிலாஸ் என்ற மாணவன் இலத்திரனியல் முறையில் வாக்களிக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளார்.


குறித்த இயந்திரத்தில் வாக்காளர்கள் தமது கடவுச் சொல்லை (வாக்குச் சீட்டு இலக்கம்) செலுத்தி தமது கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்து விரும்பிய கட்சிக்கு வாக்களிக்கக் கூடியதாக அது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், மொத்த வாக்குகளை அறியும் வசதியும் காணப்படுகின்றது. போலியான முறையில் மீண்டும் ஒருவர் வாக்குகளை அளிக்க முயன்றால் அதனை அந்த இயந்திரம் நிராகரித்து குறித்த நபரை வெளிப்படுத்தும் வகையில் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இவ் இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



இக்கண்டுபிடிப்பு வவுனியா மாவட்ட புத்தாக்க போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுள்ளதுடன், மாகாணத்தில் இரண்டாம் இடத்தையும், தேசிய ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளது. இதனையடுத்து குறித்த மாணவனுக்கு பல்வேறு பகுதிகளிலும் இருந்து வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமுள்ளன. இது குறித்து சி.கபிலாஸ் கருத்து தெரிவிக்கையில், கடந்த ஜனாதிபதி தேர்தலில் தேர்தல் செலவு அதிகமாகக் காணப்பட்டதாக எமது பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து அதனைக் குறைக்கும் வகையில் ஏதாவது செய்ய முடியுமா என புத்தாக்க போட்டியில் சிந்தித்தேன். அதன் விளைவே இந்த இயந்திரம்.

அத்துடன், குறித்த இலத்திரனியல் வாக்களிக்கும் இயந்திரத்தை மேலும் மெருகூட்டி எதிர்காலத்தில் தேர்தல்களில் பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கை என்னிடம் உள்ளது. பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற தேர்தலில் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தினர். தேர்தல் செலவுகளைக் குறைக்க வேண்டும் எனத் திட்டமிட்டுள்ள ஜனாதிபதி எனது இக் கண்டு பிடிப்பை பார்வையிட்டு, செலவு குறைந்த முறையில் வாக்களிக்கக் கூடியதாக இவ்வாறான இயந்திரத்தை மெருகூட்டிப் பயன்படுத்த தனக்கு உதவ வேண்டும் எனவும் அம்மாணவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வீட்டுக்கு வந்த அழையா விருந்தாளி



(கரவெட்டி நிருபர் ஆ.நரேன்)

உடுப்பிட்டி பிரதான வீதியில் 15ஆம் கட்டைப் பகுதியிலுள்ள வீடொன்றின் வாசல் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முதலையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காலை வேளையில் வீட்டுக்காரர் கதவைத் திறந்த போது முதலை ஒன்று நிற்பதைக் கண்டுள்ளனர். 7 அடி நீளமான முதலையை அப்பகுதி இளைஞர்களின் உதவியுடன் கட்டிவைக்கப்பட்டு வனசீவராசிகள் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வீட்டை அண்டியுள்ள பகுதியில் வயல் நிலங்கள் இருப்பதுடன் சிறிது தூரத்தில் விறாச்சிக்குளம் உள்ளது. தற்போது பெய்து வரும் மழை காரணமாகக் குளத்திலிருந்த முதலை வெளியே வந்திருக்கலாமென கருதப்படுகிறது.

## தொடர் மழை: காற்று:

# மகாவலி கங்கை பெருக்கெடுக்கும் ஆபத்து



### சில இடங்களில் 200 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்ப்பு







(கியாஸ் ஷாபி, ஜெளபர் ஏ. கரீம், வடிவேல் டினேஸ்)

தென்மேற்கு வங்கக் கடலில் நேற்றுமுன்தினம் 25ஆம் திகதி பிற்பகல் 11.30 மணியளவில் நிலவிய குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மட்டக்களப்பில் இருந்து 290 கிலோமீற்றர் தொலைவிலும், தென்கிழக்கு திசையில் திருகோணமலையிலிருந்து 410 கிலோமீற்றர் தொலைவிலும் நிலைகொண்டிருந்தது.

இதையடுத்த 12 மணி நேரத்தில் வடமேற்கு நோக்கி நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி நாட்டின் கிழக்கு கடற்கரைக்கு மிக அருகில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் சில இடங்களில் 200 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

மேலும், மகாவலி கங்கை பெருக்கக்கூடிய ஆபத்து இருப்பதால், மகாவலி கங்கை சங்கமிக்கின்ற கொட்டியார குடாவை அண்டிய பகுதியில் வாழுகின்ற மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.உப்பாறு, பூவரசன்தீவு மற்றும் சமவாஜதீவு ஆகிய 3 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த மக்களே அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் உயர்தர பரீட்சை எழுதுகின்ற மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் பிரதேச செயலாளர் தெரிவித்தார். வெள்ள அனர்த்தங்களை முகாமை செய்வதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கிண்ணியா பிரதேச அவசர அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் நேற்று(26) நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

#### மட்டு. மாங்கனியில் மினி சூறாவளி

இதேவேளை, மட்டக்களப்பு - வாகரை பிரதேச சபைக்குட்பட்ட மாங்கனி பகுதியில் நேற்றுமுன்தினமிரவு மினி சூறாவளி ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் ஏற்பட்ட இந்த மினி சூறாவளியில்,

அப்பகுதியிலுள்ள "லிவிங் கிறிஸ்டியன் அசம்பிலி" எனப்படும் தேவாலயம் முற்றாக பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இதன்போது இவ்வனர்த்தத்தில் 7 வீடுகள் பாதிப்படைந்துள்ளன.

இச்சந்தர்ப்பத்தில் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு படகுகள் கரைக்கு அப்பால் தூக்கி எறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்கையில், சீரற்ற காலநிலை காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பல்வேறு பிரதேசங்களிலும் வெள்ள அர்த்தத்தை எதிர்நோக்கி வருகிறது. இறக்காமம் பிரதேச செயலக பிரிவுகளிலும் 3ஆம், 8ஆம் கிராம சேவகர் பிரிவுகளில் தாழ்நில பிரதேசங்களிலுள்ள வீடுகள் அரச நிறுவனங்கள், வியாபார தலங்களுக்குள்ளும் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம், இறக்காமம் நன்னீர் மீனவர்களினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன் பிடி வள்ளங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு பாடசாலை, விளையாட்டு மைதானத்திற்குள் கரை ஒதுங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வெள்ள நீரில் பாம்புகள் இறந்து கரை ஒதுங்குவதால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது.

#### 342 குடும்பங்களில் 1021 பேர் பாதிப்பு

இதே வேளை இறக்காமம் கமநல சேவைகள் மத்திய நிலையத்திற்கு சொந்தமான மஜீத் வாவியிலிருந்து மேலதிக நீர் வெளியேறி வருவதுடன் குறித்த வாவியின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.இப்பிரதேசத்தை அண்டியுள்ள மக்கள் அச்சம் காரணமாக பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர்.

இதனால் இறக்காமம் பிரதேச செயலக பிரிவிலுள்ள 12 கிராம சேவைகர் பிரிவுகளிலும் 342 குடும்பங்களை சேர்ந்த 1021 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 117 குடும்பங்களை சேர்ந்த 385 பேர் குடும்ப உறவினர்களின் வீடுகளிலும் 9 குடும்பங்களை சேர்ந்த 28 பேர் மாணிக்கமடு கோவிலிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இறக்காமம் பெரிய ஜும்மா பள்ளிவாசல் பிரதேச சபை பிரதேச செயலகம் உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்புகள் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

#### அம்பாறை மாவட்டத்திற்கு சிவப்பு எச்சரிக்கை

அம்பாறை மாவட்டத்தின் கரையாரப் பகுதிகளில் கடந்த 23 ஆம் திகதி முதல் பெய்துவரும் மழையினால் மாவட்டத்தின் தாழ் நிலப்பகுதிகள் முற்றாக வெள்ளநீரினால் பாதிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை காற்றுடன் கூடிய அதிகரித்த மழை வீழ்ச்சியை அவதானிக்க முடிகின்றதுடன் வானம் இருள் சூழ்ந்து காணப்படுகின்றது. அக்கரைப்பற்று, திருக்கோவில் பகுதிகளில் பலத்த காற்று வீசியதனால் மரங்கள் முறிந்து வீழ்ந்து வீடுகள் தேசமடைந்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளது.

இதே வேளை, அக்கரைப்பற்று பிரதான வீதியில் வெள்ளநீர் வழிந்தோடுவதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.அக்கரைப்பற்று, திருக்கோவில் பகுதிகளில் காணப்படும் வெள்ளநீரை வெளியேற்ற முகத்துவார கழிமுகங்கள் வெட்டப்பட்டாலும் தொடர்ச்சியான மழையினால் வெள்ள அபாயம் தொடர்கிறது.வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## முஸ்லிம் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை

(முகம்மட் முக்தார்)

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம் பாடசாலைகளுக்கு நேற்றும்(26), இன்றும்(27) விசேட விடுமுறை வழங்குவதற்கான பணிப்புரையை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாத்தா குலேந்திரகுமார் தெரிவித்தார். இதற்கமைய தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும்க.பொ.த (உ/த) பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களாக செயற்படாத அனைத்து முஸ்லிம் பாடசாலைகளும் நேற்று 26 ம் திகதியும் இன்று 27 ம் திகதியும் மூடப்பட்டிருக்கும். பரீட்சை நிலையங்களாக அமையாத கிழக்கு மாகாண முஸ்லிம் பாடசாலைகளுக்கான 3ம் தவணை கல்வி நடவடிக்கைகள் மீண்டும் நாளை 28 ம்திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் எனவும் குறித்த தினங்களுக்கான பதில் பாடசாலை தினம் பற்றி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். தமிழ், சிங்கள பாடசாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



திகாமடுல்ல மாவட்டத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் இறக்காமம் மற்றும் வரிப்பத்தான்சேனை பிரதேச கட்சி தொண்டர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கும் மக்கள் சந்தித்திப்பு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் இறக்காமம் பிரதேச இணைப்பாளரும் ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபையின் காசாளருமான ஏ. எல். மீராசாஹிபு தலைமையில் இடம்பெற்றது. அ. இ. ம. காங்கிரஸின் இளைஞர் அமைப்பின் தலைவர் எம். ஏ. எம். நிப்ரியினால் வாழ்த்துபா மற்றும் கட்சி முக்கியஸ்தர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

(படம் : ஜௌபர் ஏ கரீம்)

# மலையகத்தில் அடைமழை: கடும் காற்று



# குடியிருப்புகளில் பாய்ந்தது வெள்ளம்

## காய்கறித் தோட்டங்களும் வெள்ளக்காடாகின

## பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு விசேட ஏற்பாடு



(க.கிஷாந்தன், டி.சந்ரு)

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை, ஹங்குராங்கெத்த, வலப்பனை ஆகிய பிரதேசங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (25) இரவு முதல் இடைவிடாது பெய்து வரும் பலத்த மழையினால் மலையகத்தின் பல பகுதிகளிலும் வெள்ள நீர் குடியிருப்புகளில் பாய்ந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கந்தப்பளையில் பெய்து வரும் அதிக மழையினால் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் பல ஏக்கர் விவசாய நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கந்தபளை பிரதேசத்தில் கல்பாலம பிரதேசம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதால் அப்பகுதியின் தாழ்வான நிலங்களில் அமைந்துள்ள பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் மரக்கறி பயிர்களும் பாரியளவில் சேதமடைந்துள்ளன. கடும் மழை காரணமாக உடப்புசல்லாவ – நுவரெலியா ஊடான போக்குவரத்தும் நேற்று தடைப்பட்டது. அத்துடன், கந்தப்பளை கோர்ட்லோட்ஜ் சந்தியில் பிரதான வீதிக்கு மேலாக வெள்ளநீர் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டதுடன் சில வீதிகள் சேதமடைந்தன. பிரதான வீதிகளில் முற்றாக வெள்ளம் சூழ்ந்ததால் வீதியோரம் உள்ள வடிகான்களை அவதானிக்க முடியாத நிலை தோன்றி மக்கள் விபத்தினை எதிர்கொள்ளும் நிலையும் உருவானது.

குறிப்பாக உடப்புசல்லாவ, இராகலை , கந்தப்பளை நகரிலிருந்து நுவரெலியாவிற்கு அன்றாடம் செல்லும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். அத்தோடு, நுவரெலியா ரேஸ்கோர்ஸ் மற்றும் விக்டோரியா பூங்கா என்பன நீரில் மூழ்கியுள்ளதோடு, அதன் அருகில் உள்ள பல வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கின. கடும் மழை காரணமாக நுவரெலியா – உடப்புசல்லாவ பிரதான வீதியில் நேற்று (26) காலை போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டதையடுத்து மாணவர்களை பரீட்சை நிலையங்களுக்கு உரிய நேரத்துக்கு அழைத்துச் செல்ல கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. பரீட்சைகளுக்கு செல்லும் மாணவர்களை உரிய நேரத்திற்குள் அழைத்துச் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக செய்யப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார்.

# புதிய நாடாளுமன்றம் முன்மாதிரியாக இருக்கும்

## மல்வத்து மகாநாயக்க தேரர்



(எம்.ஏ.அமீனுல்லா)

கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவித்துள்ள மல்வத்து விகாரையின் மகாநாயக்கர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தற்பொழுது நாடாளுமன்றத்தில் பெரும்பாலான புதிய உறுப்பினர்களை கொண்டு பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்றம் முற்றிலும் ஒரு முன்மாதிரியாக இருக்கும் என நம்ப படுவதாகவும் மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல அண்மையில் மல்வத்து மகா விகாரைக்குச் சென்று ஆசிர்வாதம் பெற்ற போதே மல்வத்து மகாநாயக்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரையாற்றிய, மாநாயக்கர் கூறுகையில்: கடந்த காலங்களில் சபாநாயகரைக் கூட திட்டி, துன்புறுத்திய அளவுக்கு நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் பலரது படுமோசமாக நடத்தைகள் நிமித்தம் அவை மக்களுக்கு வெறுப்பையும் அதிருப்தியை யும் ஏற்படுத்தியிருந்தன. அதாவது இன்று சில வெளிநாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மோசமான நடத்தைகளைப் பார்க்கும் போது அவர்கள் அதை எமது நாடாளுமன்றத்தில் இருந்து கற்றுக் கொண்டார்களா ? என நினைக்கத் தோன்றுகிறது என்றார் .

மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் தற்போதைய அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்கியதுடன் நாடு நெருக்கடியான நிலையில் உள்ளதாகவும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற கட்சி பேதமின்றி அனைத்து நாட்டுமக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து, கட்சி, எதிர்க்கட்சி வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் அதுவே நாடாளுமன்றத்தின் மாண்பை பாதுகாக்கும் எனவும் குறிப்பிட்டார்.

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரிப்பு

## வான் கதவுகள் திறப்பு மக்களுக்கு எச்சரிக்கை



(க.கிஷாந்தன்)

மத்திய மலைநாட்டில் இடைவிடாது பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. மேல் கொத்மலை, விமல சுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து வருகிறது.இதனால் நீரை வெளியேற்றுவதற்காக நேற்று (26) நீரேந்தும் பகுதிகளில் வான்கதவுகள் திறக்கப்பட்டன. மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டன. இதேவேளை காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளதால் நீர்த்தேக்க பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள் அவதானத்துடன் இருக்கும் படி அதிகாரிகளினால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்குக் கீழ் ஆற்றுப்பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பதுளை செல்லும் ரயில்கள் நானுஓயா வரையே இயக்கம்




பதுளை வரை இயக்கப்படும் பயணிகள் ரயில்கள் நானுஓயா வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது. நானுஓயாவிலிருந்து பதுளை வரையிலான புகையிரத தண்டவாளங்களில் பல இடங்களில் மண், பாறைகள், மரங்கள் வீழ்ந்துள்ளமையினால், கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை வரையில் பயணிக்கும் பயணிகள் புகையிரதங்கள் நானுஓயா வரை இயக்கப்படவுள்ளதாக ஹட்டன் புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நானுஓயா நிலையத்திற்கு இயக்கப்படும் புகையிரதங்கள் மீண்டும் திருப்பி கொழும்புக்கு இயக்கப்பட்டதாகவும், பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை வரை இயங்கும் எந்தவொரு பயணிகள் ரயிலும் செவ்வாய்க்கிழமை (26) இயங்கவில்லை எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.




# புயல் எச்சரிக்கை: பிரதமர் மோடியின் ஆந்திர விஜயம் ரத்து

இந்தியாவின் ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் பசுமை நைட்ரஜன் பூங்கா, அனகா பாடசாலை மாவட்டத்தில் ரயில்வே திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளை நாட்டுக்கு அர்ப்பணித்தல் போன்ற நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெற இருந்தது.

இத் திட்டம் ரூபாய் 80 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பணிகளுக்கு அடிக்கல் நாட்ட இருந்தார்.

இதற்காக ஆந்திர பல்கலைக்கழக மைதானத்தில் சுமார் ஒரு இலட்சம் பேர் கலந்துகொள்வதற்கான பொதுக்கூட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக வானிலை ஆய்வு மையம் புயல் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கையினால் விசாகப்பட்டினத்தில் அதிக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக மோடியின் ஆந்திரா வருகை ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வை வேறு திகதியில் நடத்துவதற்கு ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.



# “ரஹ்மான் எனக்கு தந்தையைப் போன்றவர்”

## மோகினி தே

பிரபல இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் விவாகரத்து பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், தற்போது அவரின் இசைக்குழுவை சேர்ந்த மோகினி தே இச் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

“நான் யாருக்கும் எந்த விளக்கமும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் இனியும் இது பரபரப்பாக கிசுகிசுக்கப்படுவதை நான் விரும்பவில்லை. ரஹ்மான் எனது தந்தையைப் போன்றவர்.

தவறான தகவல்களை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள்.” என்று ஏஆர் ரஹ்மானின் இசைக்குழுவில் பணியாற்றும் கிட்டாரிஸ்ட் மோஹினி தே தெரிவித்துள்ளார்.

இசை அமைப்பாளர் ஏ.ஆர். படங்கள், அவரது இசை டூர்களில் பணியாற்றியுள்ளேன்.

அந்த பயணத்தை மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். ஆனால், இதுபோன்ற உணர்வுப்பூர்மான விஷயங்களில் பொதுமக்கள் எவ்வித மரியாதை, பரிவு மற்றும் அனுதாபம் இல்லாமல் நடந்து கொள்வது வேதனையளிக்கிறது.

மக்களின் மனநிலையைப் பார்த்து நான் வேதனைப்படுகிறேன். சில ஊடகங்கள் இந்த இரு சம்பவங்களையும் கொச்சைப்படுத்தியது குற்றச்செயல் எனக் கருதுகிறேன்.

ரஹ்மான் எனக்குத் தந்தையைப் போன்றவர். என் வாழ்வில் எனக்கு நிறைய ரோல் மொடல்கள், தந்தைக்கு நிகரான அன்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என் பணி நிமித்தமான வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியுள்ளனர்.

எனது தந்தை இசையில் எனக்கு





ரஹ்மானும் அவர் மனைவி சாய்ரா பானுவும் பிரிவதாக அண்மையில் அறிவித்தனர். இதையடுத்து சில சமூக ஊடகங்களிலும் யூடியூப்பிலும் இவர்கள் பற்றி பல்வேறு அவதூறு கருத்துகள் வெளியாகின.

ரஹ்மான் விவாகரத்தை அறிவித்த மறுநாளே, அவரின் இசைக்குழுவைச் சேர்ந்த பிரபல பேஸ் கிட்டாரிஸ்ட் மோகினி தே தனது கணவர் மார்க் ஹார்ட்சசை பிரிவதாக அறிவித்தார்.

இதை ஏ.ஆர்.ரஹ்மானின் விவாகரத்துடன் தொடர்புப்படுத்தி சமூக வலைதளத்தில் பதிவுகள் வெளியாகி இருந்தன. ரஹ்மான் தரப்பில் இருந்து இந்த பதிவுகளை நீக்க வேண்டும் என்ற சட்டப்பூர்வ அறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த சர்ச்சைகளுக்கு பதிலளிக்கும் விதமாக மோகினி தே தனது இன்ஸ்டாகிராமில் பதிவொன்றை இட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது,

“எனக்கும், ரஹ்மானுக்கும் எதிராக அடிப்படையே இல்லாத ஊகங்கள், தவறான தகவல்கள் பெருமளவில் வெளியாவதை என்னால் நம்பவே இயலவில்லை. நான் எனது சிறு வயதிலிருந்தே ரஹ்மானின் நிறைய கற்றுக்கொடுத்தார். அவர் கடந்த ஆண்டு மறைந்தார். ரஞ்சிபரோட் தான் என்னை இந்த இசைத் துறையில் அறிமுகப்படுத்தினார். லூயி பாங்ஸ் என்னை செதுக்கினார்.

ரஹ்மான் அவரது இசை நிகழ்ச்சியில் நான் மிளிர எனக்கு சுதந்திரம் தந்தார். அவரது ரெக்கோர்டிங் செசன்களிலும் அவரது இசைக் கோப்புகளிலும் எனக்கு சுதந்திரம் தந்தார். அந்தத் தருணங்கள் மகத்தானவை. அவற்றை நான் என்றும் நினைவில் வைத்திருப்பேன்.

சில வதந்திகள் ஒருவரின் மனதில், வாழ்க்கையில் என்ன மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என பரபரப்புச் செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் அறிவதில்லை. கொஞ்சமேனும் உணர்வோடு நடந்து கொள்ளுங்கள்.

நான் யாருக்கும் எந்த விளக்கமும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் இனியும் இது பரபரப்பாக கிசுகிசுக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

இவை என் நாட்களில் குறுக்கிடுவதை நான் விரும்பவில்லை. தவறான தகவல்களை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். எங்கள் தனிப்பட்ட சுதந்திரத்தை மதிக்கவும்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பாம்புகளுடன் விமான நிலையம் வந்த இரு பெண்கள்

இந்தியாவின் தெலுங்கானா மாநிலம், ஷாம்ஷா பாத்திலுள்ள ராஜீவ்காந்தி சர்வதேச விமான நிலையத்தில் பாம்புகளை வைத்திருந்த இரண்டு பெண்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாங்கொங்கில் இருந்து வந்த விமானத்தில் இரண்டு பெண் பயணிகள் வித்தியாசமான பெரிய கூடை ஒன்றை வைத்திருந்ததை சுங்க அதிகாரிகள் நோட்டமிட்டுள்ளனர்.

அவர்கள் வைத்திருந்த கூடைகளை பறிமுதல் செய்து சோதனையிட்டனர். அதில் கவர்ச்சிகரமான இரண்டு பாம்புகள் இருந்துள்ளன. இதனைக் கண்ட சுங்க அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குறித்த பெண்கள் இருவரும் பாம்புகளுடன் பாங்கொங்கிலிருந்து ஐதராபாத்துக்கு வந்துள்ளனர்.

இரண்டு பாம்புகளும் அதிக விஷத்தன்மையானவை. அவற்றை மீட்ட அதிகாரிகள் இரண்டு பெண்களையும் காவலில் வைத்தனர்.

இப் பாம்பு கடத்தல் சம்பவத்துடன் இப் பெண்கள் இருவர் மட்டும்தான் சம்பந்தப்பட்டுள்ளார்களா அல்லது வேறு யாருக்கும் இதில் தொடர்பு இருக்கிறதா என அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தல்

## 71 உறுப்பினர்கள் கோடீஸ்வரர்கள்

இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துள்ளது.

இதில் வெற்றியீட்டிய சட்டமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் தொடர்பில் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான தன்னார்வ அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.




அந்த தரவுகளின் அடிப்படையில் 81 சட்டமன்ற உறுப்பினர்களில் 71 பேர் கோடீஸ்வரர்கள் ஆவர்.

இது 2019 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றியீட்டிய சட்டமன்ற உறுப்பினர்களை விடவும் 20 சதவீதம் அதிகமாகும்.

# வெடித்துச் சிதறிய வீடுகள்: இரு பெண்கள் உயிரிழப்பு

மத்திய பிரதேச மாநிலம் முரைனா நகரில் அமைந்துள்ள ரத்தோர் காலனியில் மூன்று வீடுகள் திடீரென நள்ளிரவு வேளையில் வெடித்துச் சிதறியுள்ளன.

இதில் இரண்டு பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதோடு ஐவர் காயமடைந்துள்ளனர்.

சிலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

வீடுகள் திடீரென வெடித்துச் சிதறியமைக்கான காரணம் இதுவரையில் வெளிவரவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதோடு,வெடி விபத்துக்கான காரணத்தை கண்டறியும் பணிகளும் தீவிரமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# இந்தியாவில் புலிகளின் அதிகரிப்பு

இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கணக்கெடுப்புக்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, 2014இல் 2226 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2018இல் 2967 ஆக அதிகரித்துள்ளது.

பின் புலிகளின் எண்ணிக்கை 3682 ஆக உயர்ந்தது.

அதன்படி பார்க்கையில் வருடத்துக்கு 6 சதவீதம் என்ற வீதத்தில் புலிகளின்



எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

தமிழ்நாட்டில் 2006 ஆம் ஆண்டு 76 புலிகளும் 2010 ஆம் ஆண்டில் 163 புலிகளும் 2014 இல் 229 புலிகளும் 2018 இல் 264 புலிகளும் 2022 இல் 306 புலிகளும் என அதன் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

வேட்டையாடுதல் போன்ற பல காரணங்களினால் தமிழ்நாட்டில் 2021 ஆம் ஆண்டு முதல் 5 புலிகள் வரையில் உயிரிழந்துள்ளதாக சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறையினால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிசேரியனின்போது துவாயை வைத்து தைத்த மருத்துவர்கள்

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள அரச மருத்துவமனையில் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒரு பெண்ணுக்கு சிசேரியன் மூலம் குழந்தை பிறந்துள்ளது.

அறுவை சிகிச்சையின்போது தவறுதலாக அப் பெண்ணின் வயிற்றில் துவாயை வைத்து தைத்துள்ளனர் மருத்துவர்கள்.



இதையடுத்து அப் பெண் கடுமையான வயிற்றுவலியால் பாதிக்கப்பட்டுள்ளார்.

எதனால் வயிற்று வலி ஏற்படுகிறது என்று தெரியாத அப் பெண் சுமார் மூன்று மாதங்களாக வயிற்று வலிக்கு சிகிச்சை பெற்றுள்ளார். ஆனாலும் வலி குறைந்தபாடில்லை. இறுதியாக ஒரு மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டபோது அப் பெண்ணின் வயிற்றில் 15X10 சென்ரிமீற்றர் அளவு துவாய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அறுவை சிகிச்சையின் மூலம் அப் பெண்ணின் வயிற்றிலிருந்த துவாயை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

அதிகமான வயிற்று வலியின் காரணமாக அப் பெண்ணால் சரிவர சாப்பிட முடியாமல் சென்றுள்ளது. இதன் காரணமாக தாய்ப்பால் உற்பத்தி குறைந்து குழந்தைக்கு பால் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது ஏறிய லொறி – ஐவர் பலி

கேரள மாநிலம், திருச்சூர் மாவட்டம் நாட்டிகா எனும் இடத்தில் வீதியோரம் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது லொறி ஏறியதில் ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

நான்கு பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லொறி சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேசிய நெடுஞ்சாலை பணி நடைபெற்று வருவதால் அந்த வீதியில் போக்குவரத்து அனுமதி மறுக்கப்பட்டு இருந்ததாக பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.



## பாகிஸ்தானின் வெடித்த வன்முறை

# இராணுவவீரர்கள் உட்பட அறுவர் பலி ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது





ஊழல் வழக்கில் பிணை பெற்ற பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விடுதலை செய்ய கோரி அவரது ஆதரவாளர்கள் முன்னெடுத்த போராட்டம் வன்முறையாக வெடித்ததில் அறுவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் துணை இராணுவ வீரர்கள் நால்வர் மற்றும் இரண்டு பொலிஸார் உள்ளடங்குகின்றனர். மேலும் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இதனால் பாகிஸ்தானில் வன்முறையில் ஈடுபடும் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள அந்நாட்டு இராணுவத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தலைநகர் செல்லும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டன. மேலும் பாதுகாப்பு கருதி இராணுவ வீரர்கள், பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவின்படி பொதுமக்கள், நான்கு அல்லது






அதற்கு அதிகமானோர், பொது இடத்தில் மக்கள் கூடுவதற்கு தடை செய்யப்பட்ட பகுதியில் கூடுவது குற்றமாக கருதப்படும்.

மேலும் தொலைபேசி மற்றும் இணைய சேவைகளும் துண்டிக்கப்பட்டன. ஆனால் இம்ரான் கானின் ஆதரவாளர்கள் எதனையும் பொருட்படுத்தாது சுமார் ஆயிரக்கணக்கானோர் இஸ்லாமாபாத்தை நோக்கி பேரணியாக சென்றனர்.

பஞ்சாப் மாகாணத்தில் நுழைந்தபோது பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதன்போது கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் போராட்டத்தில் பங்கேற்ற சுமார் 4 ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்தனர்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான்கான், பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவராகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

அவர் தனது பிரதமர் பதவிக் காலத்தில், தனக்குக் கிடைத்த பரிசுப் பொருட்களை கருவூலத்தில் சேர்க்காமல் இம்ரான் கானும் அவரது மனைவியும் விற்பனை செய்து சொத்து சேர்த்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

மேலும் பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய இரகசிய தகவல்களை கசியவிட்டதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட அ“சிபர்“ வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் “சிபர்“ வழக்கை விசாரித்து வந்த பாகிஸ்தான் நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்த வழக்கில் இம்ரான்கானுக்கும் அவரது மனைவிக்கும் வழங்கப்பட்ட 14 ஆண்டு சிறை தண்டனையை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் நிறுத்தி வைத்து உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த வழக்கில் பிணை வழங்குமாறு கோரி இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றில் இம்ரான் கான் மேன்முறையீடு செய்திருந்தார்.

அந்த மனு மீதான விசாரணை கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆனால், இம்ரான் கானுக்கு பிணை வழங்கப்பட்ட ஒரு மணித்தியாலத்திலேயே ராவல்பிண்டி பொலிசார் அவரை கைது செய்தனர்.

இம்ரான் கான் மீது பயங்கரவாதம் மற்றும் பிற குற்றச்சாட்டுகள் தொடர்பாக நியூடவுன் பொலிஸ் நிலையத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

அதன் அடிப்படையில், அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

---

பிரித்தானியாவில் ஆளும் கட்சிக்கு நெருக்கடி

# ஆறு மணி நேரத்தில் இரண்டு இலட்சம் பேர் கையெழுத்து



பிரித்தானியாவில் மறு தேர்தல் நடத்த வேண்டும் என வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ள கையெழுத்து இயக்கத்தில் ஆறு மணிநேரத்தில் இரண்ட லட்சம் பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

இது ஆளும் தொழிலாளர் கட்சிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் கடந்த ஜுலை மாதம் நடந்த தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

அந்நாட்டின் பிரதமராக கெய்ர் ஸ்டார்மர் பொறுப்பேற்றுக் கொண்டார். தற்போது அவரது ஆட்சி தொடங்கிய நான்கு மாதங்களிலேயே அவருக்கு எதிரான அலை வீசத் தொடங்கியுள்ளதாக அரசியல் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கட்சியின் கொள்கை மற்றும் ஆளும் கட்சியின் செயல்பாடுகளினால் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளதால், மறுதேர்தல் நடத்தக்கோரி, கையெழுத்து இயக்கம் நேற்று நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை தொடங்கப்பட்ட ஆறு மணிநேரத்திலேயே இரண்டு லட்சம் பேர் கையெத்திட்டுள்ளனர்.

பொதுவாக, இவ்வாறான சட்டம் அல்லது கொள்கையின் மீது இது போன்ற கையெழுத்து இயக்கம் தொடங்கி 10 ஆயிரம் பேர் கையெழுத்திட்டால் அதற்கு அரசு தரப்பில் பதிலளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

ஒரு லட்சம் பேர் கையெழுத்திட்டால் நாடாளுமன்றில் விவாதம் நடத்த வேண்டும். இவ்வாறான நிலையில் அரசுக்கு எதிராக இரண்டு லட்சம் பேர் கையெழுத்திட்டிருப்பது, ஆளும் கட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

---

# மியான்மாரில் நிலநடுக்கம்



மியான்மாரில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டின் தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மியான்மரில் நேற்று மதியம் 1.33 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆக பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 கி.மீ. ஆழம் கொண்ட இந்த நிலநடுக்கம், 24.77 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 96.30 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக, மியான்மரில் கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி 4.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானது என்பது குறிப்பிடத்தக்கது.

---

# லெபனான் மீது இஸ்ரேல் தொடர் தாக்குதல்



இஸ்ரேலிய இராணுவம் லெபனான் மீது தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, இஸ்ரேல் அதிகாரிகளுடன் பாதுகாப்பு ஆலோசனை நடத்திய பின்னர் 60 நாள் போர் நிறுத்த திட்டத்திற்கு அனுமதி வழங்கவுள்ளதாக தகவல்கள் வெளியான நிலையில் லெபானான் மீது தொடர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காசாவில் உள்ள பலஸ்தீனர்கள் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேலின் தாக்குதலுக்கு லெபனானில் இயங்கி வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து இரு நாடுகளுக்குமிடையிலான நேரடி தாக்குதல் அதிகரித்துள்ளது.

லெபனான் மீது தரைவழி மற்றும் வான் தாக்குதலை இஸ்ரேல் அதிகரித்தது. அதற்கு ஹிஸ்புல்லாவும் பதிலடி கொடுத்து வருகிறது.

இஸ்ரேல்- ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்தம் ஏற்பட அமெரிக்க, ஐரோப்பிய யூனியன் உள்ளிட்டவை முயற்சி மேற்கொண்ட போதிலும் பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டாமல் இருந்து வந்தது.

---

# இஸ்ரேலுக்கு எதிரான ஐ.நாவில் முறையிட தயாராகும் லெபனான்



தனது நாட்டு படையினர் மீது இஸ்ரேல் மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்துவதாகவும், அதனை ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் கண்டிக்க வேண்டும் எனவும் லெபனான் அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன், ஐநா பாதுகாப்பு பேரவையில் முறைப்பாடு செய்யவும் தீர்மானித்துள்ளது. இந்த முறைப்பாட்டில் நவம்பர் 17 முதல் 24ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை கவனம் செலுத்த லெபனான் திட்டமிட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில்இஸ்ரேலிய தாக்குதல்களில் 10 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் 35 பேர் காயமடைந்ததாகவும் லெபனான் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு ”தீர்வுக்கான எந்தவொரு முன்முயற்சியையும் நிராகரிக்கும் இஸ்ரேலின் தெளிவான செய்தி மற்றும் இராஜதந்திரத்திற்கு பதிலாக இராணுவ விரிவாக்கத்தை வலியுறுத்துகிறது” என்று லெபனான் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் எட்டாம் திகதி இஸ்ரேலிய இராணுவத்துடன் ஹிஸ்புல்லா அமைப்பினர் தாக்குதல் நடத்தியதில் இருந்து 40 லெபனான் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இஸ்ரேலின் வடக்கில் உள்ள கிரியாத் ஷ்மோனா நகரத்தின் ஹிஸ்புல்லா அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலினால் ஏற்பட்ட அனைத்து சேதங்களையும் சரி செய்ய நான்கு மாதங்கள் ஆகும் என்று அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்நகரில் சுமார் 7,000 கார்கள் மற்றும் 300 விவசாயத் தளங்கள் சேதமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, காசா பகுதியில், இஸ்ரேலிய தாக்குதலின் ஒரு வருடத்திற்குப் பின்னர், காசாவில் சுமார் 40 மில்லியன் தொன் குப்பைகள் மற்றும் இடிபாடுகளை காணப்படுவதாக ஐ.நா மதிப்பிட்டுள்ளது. இது நியூயார்க்கின் மத்திய பூங்காவை எட்டு மீட்டர் (சுமார் 25 அடி ஆழத்திற்கு நிரப்ப போதுமானது. இவை அனைத்தையும் அழிக்க 15 ஆண்டுகள் மற்றும் 650 மில்லியன் டொலர் செலவும் ஏற்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

காசாவின் சேதமடைந்த மற்றும் அழிக்கப்பட்ட வீடுகள் அனைத்தையும் சரிசெய்ய 40 ஆண்டுகள் ஆகும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், தெற்கு லெபனானில், டஜன் கணக்கான நகரங்கள் இஸ்ரேலிய இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

---




# கனடா, மெக்சிகோ, சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி அதிகரிப்பு

## ட்ரம்ப் அறிவிப்பு

கனடா, மெக்சிகோ மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக அளவில் வரி விதிப்பதற்கு டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்காவின் புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கையழுத்திடும் கோப்புகளில் இதுவும் ஒன்று என ட்ராம்ப் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப் பொருள் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் விதமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரக்கணக்கானோர் மெக்சிகோ, கனடா வழியாக அமெரிக்காவுக்குள் நுழைந்துள்ளனர். அவர்களால் குற்றம் மற்றும் போதைப்பொருள் ஆகியவற்றை நாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். அதை அனைவரும் அறிவர்.

இதற்கு முன்னதாக இதுபோன்று நடந்தது கிடையாது. ஆகையினால், ஜனவரி 20ஆம் திகதி என்னுடைய முதல் நிர்வாக உத்தரவில் மெக்சிகோ, கனடா பொருட்களுக்கு 20 சதவீதம் வரி விதிக்கப்படும்.

அத்துடன் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதம் வரி விதிக்கப்படும்.

போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத ஊடுருவல் இரண்டும் நிறுத்தப்படும் வரை இந்த வரி விதிப்பு நீடிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு SPORTS



# ஐபில் மெகா ஏலம்

## முழுமையாக ஒரு பார்வை




2025ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஐபிஎல் கிரிக்கெட் தொடருக்கான மெகா ஏலம் சவூதி அரேபியாவில் உள்ள ஜெட்டா நகரில் கடந்த 24 மற்றும் 25ஆம் திகதிகளில் நடந்து முடிந்துள்ளது.

ஏலத்திற்கு முன்னதாக ஒவ்வொரு அணிகளும் ஆறு வீரர்களை தக்கவைத்துக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து 10 அணிகளும் 46 தக்கவைத்துக்கொண்டன.



அதன்படி முதலாவதாக தக்கவைக்கப்படும் வீரருக்கு 18 கோடி ரூபாயும், இரண்டாவது வீரருக்கு14 கோடி ரூபாயும், மூன்றாவது வீரருக்கு 11 கோடி ரூபாயும், நான்காவது வீரருக்கு 18 கோடி ரூபாயும், ஐந்தாவது வீரருக்கு 14 கோடி ரூபாயும் வழங்க வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் இந்திய அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடாத வீரர்களை தக்க வைத்துக் கொண்டால் அவர்களுக்கு அதிகபட்சமாக நான்கு கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டும்.

அதன்படி ஆறு வீரர்கள் இந்திய வீரர்களாகவும் இருக்கலாம் அல்லது வெளிநாட்டு வீரர்களாகவும் இருக்கலாம். ஆறு வீரர்களை தக்க வைக்காமல், அனைவரையும் ரிலீஸ் செய்யும் அணி ஏலத்தின் போது ஆறு சுவுஆ கார்டை பயன்படுத்தி வீரர்களை வாங்கிக் கொள்ளலாம்.

ஏலத்திற்கு முதற்கட்டமாக 1,165 இந்தியர்கள், 409 வெளிநாட்டவர்கள் என்று மொத்தம் 1,574 வீரர்கள் பதிவு செய்திருந்தனர். இதில் 48 இந்தியர்கள் உள்பட 320 வீரர்கள் சர்வதேச போட்டியில் ஆடியவர்கள் ஆவர்.

இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட 1574 வீரர்களின் எண்ணிக்கை தற்போது 574 ஆக குறைக்கப்பட்டு இறுதி கட்ட பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.



தொகுப்பு : ஆர்.மனோசங்கர்

இதில் 366 இந்தியர்கள் மற்றும் 208 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். 10 அணிகள் மொத்தம் 204 இடங்களை நிரப்ப வேண்டும், அவற்றில் 70 வெளிநாட்டு வீரர்களுக்கானது.



### அதிக தொகைக்கு விலைபோன வீரர்கள்

இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்ற மெகா ஏலத்தில் 639.15 கோடியை செலவிட்டுள்ள 10 அணிகளின் உரிமையாளர்களும் 182 வீரர்களை ஏலத்தில் எடுத்துள்ளனர்.

அதிகபட்சமாக இந்திய வீரர் ரிஷப் பந்த் 27 கோடி இந்திய ரூபாவிற்கு லக்னோ அணியால் வாங்கப்பட்டார். இதன் மூலம் ஐபிஎல் வரலாற்றில் வீரர் ஒருவர் அதிகப்பட்ச தொகைக்கு வாங்கப்பட்ட வீரர் என்ற சாதனையை ரிஷப் பந்த் படைத்துள்ளார்.

அவருக்கு அடுத்தப்படியாக ஷ்ரேயாஸ் ஐயர் 26.75 கோடிக்கு பஞ்சாப் அணியால் வாங்கப்பட்டார். மேலும் தமிழகத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் ஐயர் (23.75 கோடி ரூபாவிற்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியால் வாங்கப்பட்டார்.

சுழற்பந்து வீச்சாளர்களில் அதிக விலைக்கு யுஸ்வேந்திர சாஹல் ஏலம் போனார். அவரை 18 கோடிக்கு பஞ்சாப் அணி வாங்கியது. குறைந்த பட்சமாக அடிப்படை விலையான 30 லட்சம் ரூபாவிற்கு பல வீரர்களை அனைத்து அணிகளும் வாங்கியிருந்தன.

### 1.10 கோடிக்கு வாங்கப்பட்ட 13 வயது வீரர்

13 வயது கிரிக்கெட் வீரர் வைபவ் சூர்யவன்ஷியை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி ஏலத்தில் வாங்கியது. ஐபிஎல் கிரிக்கெட் வரலாற்றில் மிக குறைந்த வயதுடைய நபர் என்ற சாதனையை வைபவ் சூர்யவன்சி ஏற்படுத்தியுள்ளார்.

ஐபிஎல் மெகா ஏலத்தின் இரண்டாவது நாளின் போது பீஹாரை சேர்ந்த சூர்யவன்சியை ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் கொடுத்து ராஜஸ்தான் அணி விலைக்கு வாங்கியது.

இவரை ஏலத்தில் எடுக்கும் போது ராஜஸ்தான் மற்றும் டெல்லி கெபிடல்ஸ் அணிகளுக்கு இடையே கடும் போட்டி காணப்பட்டது. இரு அணிகளிடமும் குறைவான தொகை இருந்த சூழலில் ராஜஸ்தான் அணி சூர்யவன்சியை தன்வசப்படுத்தியது.

### ஐபிஎல் வரம் பெற்ற இலங்கை வீரர்கள்

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் ஏழு இலங்கை வீரர்கள் விளையாட உள்ளனர்.

ஏற்கனவே இலங்கை வேகப் பந்து வீச்சர் மத்தீஷ பத்திரனவை சென்னை அணி தக்க வைத்திருந்த நிலையில், மேலும் ஆறு வீரர்கள் ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, வனிந்து ஹசரங்க மற்றும் மஹிஷ் தீக்ஷன ஆகியோர் முந்தைய நாள் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியால் வாங்கப்பட்டனர். இரண்டாம் நாளில் மேலும் நான்கு வீரர்கள் ஏலத்தில் வாங்கப்பட்டுள்ளனர்.

நுவான் துஷாரவை பெங்களூர் ரோயல் செலஞ்சர்ஸ் அணியும், கமிந்து மெந்திஸை சன்ரைஸ் ஹைதராபாத் அணியும் வாங்கியுள்ளன. துஷ்மந்த சமீரவை டெல்லி கெப்பிடல்ஸ் அணியும், புதிய வீரர் எஷான் மலிங்கவை சன்ரைஸ் ஹைதராபாத் அணியும் வாங்கியுள்ளன.

### விலை போகாத வீரர்கள்

நடந்து முடிந்த மெகா ஏலத்தில், கடந்த காலங்களில் ஐபிஎல் போட்டிகளில் பிரகாசித்த நட்சத்திர வீரர்கள் பலரும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கேன் வில்லியம்சன், டேவிட் வார்னர், ஜோனி பேர்ஸ்டோவ், கேசவ் மகராஜ், மயங்க் அகர்வால், பியூஷ் சாவ்லா, ஷர்துல் தாக்கூர், பிரித்வி ஷா, தேவ்தத் படிகல் போன்ற வீரர்கள் கூட ஏலத்தில் போகவில்லை.

இவர்களை தவிற முஜீப் உர் ரஹ்மான், ஷாய் ஹோப், ஸ்ரீகர் பாரத், அலெக்ஸ் கேரி, கார்த்திக் தியாகி, டொம் லாதம், முருகன் அஸ்வின், கிறிஸ் ஜோர்டான், நவ்தீப் சைனி, சிவம் மாவி, மெத்தேயு ஷார்ட், டேரில் மிட்செல், பிராண்டன் கிங், பெத்தும் நிஸ்ஸங்க மற்றும் ஸ்டீவ் ஸ்மித் உள்ளிட்ட வீரர்களும் ஏலத்தில் வலைபோயிருக்கவில்லை.

### ஜேம்ஸ் ஆண்டர்சனுக்கு ஏமாற்றம்

இந்தியன் பிரீமியர் லீக்கில் விளையாடும் ஆசையுடன் வந்த இங்கிலாந்து கிரிக்கெட் ஜாம்பவான் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சனை ஐபிஎல் அணிகள் புறக்கணித்துள்ளன. 42 வயதான ஆண்டர்சன் 1.25 கோடி அடிப்படை விலையில் ஐபிஎல் ஏலத்தில் பதிவு செய்திருந்தார்.

முதல் சுற்றில் விற்பனையாகாமல் போன ஆண்டர்சனை இறுதிச் சுற்றுக்கு பரிசீலிக்க அணிகள் முன்வரவில்லை. இதனை அவர் ஏலத்தில் எடுக்கபடவில்லை.

ஆண்டர்சன் கடைசியாக 2014ஆம் ஆண்டு டி20 கிரிக்கெட்டில் விளையாடியிருந்தார். ஆண்டர்சன் இங்கிலாந்துக்காக 19 டி20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

தனதுகிரிக்கெட்வாழ்க்கையில்கடைசிகட்டத்தில்,டெஸ்ட் கிரிக்கெட்டில் முழு கவனத்தையும் செலுத்தினார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளரும் ஆண்டர்சன் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ரொனால்டோவின் அசத்தலான இரட்டை கோல் அல் நசர் அபார வெற்றி

கிறிஸ்டியானோ ரொனால்டோவின் இரட்டை கோல்களின் உதவியுடன் அல் கராபா கழகத்துக்கு எதிரான போட்டியில் 3-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அல் நசர் அணி 13 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திற்கு முன்னேற்றியுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெறும் கழக மட்ட கால்பந்து தொடர்களின் முதன்மைத் தொடரான சவுதி அரேபியாவின் ஏ.எப்.சி சம்பியன் லீக் கால்பந்து தொடரின் ஐந்தாவது வாரத்துக்கான ஆட்டத்தில் நேற்றைய தினம் கிறிஸ்டியானோ ரொனால்டோ தலைமையிலான அல் நசர் கழகம், அல் கராபா கழகத்தினை அல் பைட் அரங்கில் எதிர்த்தாடியது.

விறுவிறுப்புக்குப் பஞ்சமின்றி ஆரம்பித்த போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களின் கோல் முயற்சிகளும் பின்கள வீரர்களால் தடுக்கப்பட்டன.

அதற்கமைய போட்டியின் 29வது நிமிடத்தில் அல் நசர் அணிக்கு பெனால்ட்டி உதைக்கான வாய்ப்பு நடுவரினால் வழங்கப்பட்ட போதிலும் பின்னர் வி.ஏ.ஆர் முறை மூலம் பரிசீலிக்கப்பட்டு அவ்வாய்ப்பு நிராகரிக்கப்பட்டது. இதனால் முதல் பாதி கோல்கள் இன்றி சமநிலை பெற்றது.

தொடர்ந்து ஆரம்பித்த தீர்க்கமான இரண்டாவது பாதி ஆட்டத்தில் முதல் நிமிடமான 46வது நிமிடத்தில் வைத்து அல் கன்னாம் கொடுத்த பந்துக் கடத்துதலை பெற்றுக் கொண்ட கிறிஸ்டியானோ ரொனால்டோ மிக இலகுவாக கோல் அடித்தார்.

பின்னர் 58ஆவது நிமிடத்தில் ஏஞ்சலோ கேப்ரியல் தன் பங்கிற்கு ஒரு கோல் அடிக்க 2-0 என்ற கோல் கணக்கில் என முன்னிலையை வலுப்படுத்தியது அல் நசர் கழகம்.

மேலும் தொடர்ந்த ஆட்டத்தின் 64வது நிமிடத்தில் வைத்து பந்தை அல் கபாரா கழகத்தின் கோல் கம்பத்தினுள் செலுத்திய ரொனால்டோ தன் கோல் கணக்கை இரட்டிப்பாக்க அல் நசர் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றியை உறுதிப்படுத்தியது.

தொடர்ந்த ஆட்டத்தின் 75வது நிமிடத்தில் வைத்து ஜொசேலு அல் கபாரா கழகத்திற்கான ஆறுதல் கோலை உட்செலுத்த போட்டியின் முழு நேர ஆட்டமும் முடிவுக்கு வந்தது.

இதன்படி, 3-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அல் நசர் கழகம் ஐந்து போட்டிகளில் நான்கு வெற்றியுடன் 13 புள்ளிகளைப் பெற்று புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.



# கிரிக்கெட் உலகில் பதிவான மிக மோசமான சாதனை; ஏழு ஓட்டங்களுக்கு ஆட்டமிழப்பு

சர்வதேச டி20 கிரிக்கெட் வரலாற்றில் ஐவரி கோஸ்ட் அணி மிகக் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்து மிகவும் மோசமான சாதனையை படைத்துள்ளது.

டி20 உலகக் கிண்ணத்திற்கான துணைப் பிராந்திய ஆபிரிக்கா தகுதிச் சுற்றின் குழு சி ஆட்டத்தில் நைஜீரியாவிற்கு எதிரான போட்டியில் ஐவரி கோஸ்ட் தர்மசங்கட நிலையை எதிர்கொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நைஜீரியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் நான்கு விக்கெட் இழப்புக்கு 271 ஓட்டங்களை குவித்திருந்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் செலின் சாலுவின் அபாரமாக விளையாடி 112 ஓட்டங்களை பெற்றிருந்ததுடன், சுலைமான் ரன்சேவ் 50 ஓட்டங்களையும் இசக் ஒக்பு 65 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐவரிகோஸ்ட் 7.3 ஓவரில் ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. தொடக்க ஆட்டக்காரர் அவுட்டாரா முஹம்மது அதிக பட்சமாக நான்கு ஓட்டங்களை பெற்றிருந்தார்.

கடந்த செப்டம்பரில் சிங்கப்பூருக்கு எதிராக மொங்கோலியாவும், கடந்த ஆண்டு ஸ்பெயினுக்கு எதிராக Isle of Man அணிக ளும் எடுத்த 10 ஓட்டங்களே டி20 வரலாற்றில் பெற்றுக்கொண்ட மிகக் குறைந்த ஓட்டக் குவிப்பாகும். அந்த மோசமான சாதனையை தற்போது ஐவரிகோஸ்ட் முறியடித்துள்ளது.





SEVEN ALL OUT

LOWEST TOTALS IN MEN'S T20 INTERNATIONALS

| TOTAL | TEAM | OPP | GROUND | YEAR |
|---|---|---|---|---|
| 7 | Ivory Coast | Nigeria | Lagos | 2024 |
| 10 | Isle of Man | Spain | Cartagena | 2023 |
| 10 | Mongolia | Singapore | Bangi | 2024 |
| 12 | Mongolia | Japan | Sano | 2024 |
| 17 | Mongolia | Hong Kong | Kuala Lumpur | 2024 |

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 27ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.